## நாகரீகப் போக்கு.

### முன்னறிவிப்பு.

மகாத்மா காந்தி "யங் இந்தியா" வில் எழுதுகிறார்.

அமெரிக்காவில் துஷ்டச் சிறுவர்களும், சோர இன்பத்தில் பிரியம் மிகுந்த பெண்களும் நாளுக்கு நாள் மிகுந்து வருவதை விளக்கி ஒரு பத்திரிகையில் வெளிவந்த வரலாற்றை ஒரு நண்பர் எனக்கு அனுப்பியிருக்கிறார். அதாவது:—

ஒரு தாயார் தன் நான்கு வயதுள்ள மகனை நிக்குச்சி எடுத்து விளையாடக் கூடாதென்று கண்டித்தாளாம். மகன் கோபம் கொண்டு துப்பாக்கியால் தாயாரைச் சுட்டானாம்.

போலீசார் அவனைப் பிடிக்கச் சென்றபோது சிறுவன் அவர்களையும் சுட்டுவிடுவதாகப் பயமுறுத்தினானாம். பிரேத விசாரணை செய்த அதிகாரி, சுட்ட காரணத்தைப் பையனிடம் கேட்டபோது பையன் வெறிகொண்டு ஒரு கத்தியைக் கைப்பற்றி அதிகாரி மீது பாய்ந்து குத்த எத்தனித்தானாம்.

சிறுவர், சிறுமியர் செய்யும் இத்தகைய பாதகச் செயல்கள் அமெரிக்கப் பத்திரிகைகளில் தினந்தோறும் வெளிவருகின்றன. அநேக அமெரிக்க கலாசாலைகளில் தற்கொலைச் சபைகளும், குற்றச் சங்கங்களும் இருப்பதாகத் தெரிகிறது. கலாசாலையில் படிக்கும் பெண்களும் சோர இன்பத்தில் விருப்பம் கொண்டு பல கொடிய அக்கிரமங்கள் செய்கிறார்களாம்.

பத்திரிகைகள் மிகுந்த அமெரிக்காவில் பரபரப்பை உண்டுபண்ணும் பொருட்டு பொய்க்கதைகள் கட்டிப் பிரசுரிக்கப்படுவதும் உண்டு. எனினும் பத்திரிகைகளில் வெளிவரும் வரலாறுகள் எல்லாம் பொய்யாயிருக்கவும் நியாயமில்லை. அமெரிக்காவில் சிறுவரும் சிறுமியரும் கட்டுக்கடங்காது தான் தோன்றிகளாய்த் திரியத்தலைப்பட்டுவிட்டனர். இது அவர்கள் பின்பற்றும் நாகரீகத்தின் பலனாகும். இத்தகைய குற்றங்கள் நாள்தோறும் பெருகி வந்தாலும், மேல் நாட்டார் மதிப்புப்படி அமெரிக்காவில் நாகரீகம் விருத்தியடைந்து வருவதாகவே சொல்லப்படுகிறது. அமெரிக்காவிலுள்ள விவேகிகள் இந்த விநோத நாகரீகத்தால் வரும் தீமைகளை நன்குணர்ந்து அவைகளைப் பரிகரிக்கவும் முயற்சி செய்துவருகிறார்கள்.

இந்தக் கொடிய மேனாட்டு நாகரீகத்தை நாமும் பின்பற்ற வேண்டுமா? மேனாட்டுப் பத்திரிகைகளில் வெளிவரும் பயங்கரமான வரலாறுகளைப் படித்தபிறகும் நாம் கண்மூடித்தனமாய் மேனாட்டார் வாழ்க்கை முறையைக் கைக்கொள்ள முயல்வது ஒழுங்கா? நமது சொந்த நாகரீகத்திலுள்ள குற்றம் குறைகளைக் களைந்து, அதைப் பின்பற்றுவதே சிலாக்கியமாகும்.

மேல்நாட்டு நாகரீகம் மேலானதா? கீழ் நாட்டு நாகரீகம் மேலானதா? என்று ஆராயப் புகுவதும் வீண் வேலை. மேல் நாட்டார் போக்குக்குத் தகுந்தபடி அவர்களுடைய நாகரீகம் அமைந்திருக்கிறது. நமது நிலைமைக்குப் பொருத்தமாக நம்முடைய நாகரீகம் அமைந்திருக்கிறது. மேலே விவரித்தபடி அமெரிக்காவில் நடைபெறும் அக்கிரமச் செயல்களை நம் நாட்டில் காணமுடியாது. இளமை முதற்கொண்டு அடக்க ஒழுக்கமாக நடக்க நாம் நம் சிறுவர், சிறுமிகளைப் பழக்கி வருகிறோம். பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் குணம் நம் சிறுவர்களுக்கு இயல்பாகவே உண்டாகி விடுகிறது. ஆனால் இந்தக் கீழ்ப்படிதல் பயங்காளித்தனமாக முற்றிவிடாதபடி நாம் பார்த்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

மேல் நாட்டு நாகரீகத்தைப் பின்பற்றுவோருக்குத் தேவைகள் அதிகம்; நமக்குத் தேவைகள் குறைவு. நாம் ஆசையை அடக்கப் பார்க்கிறோம்; மேல் நாட்டார் ஆசையை வளர்க்கப் பார்க்கிறார்கள். எல்லா இன்பங்களும் இவ்வுலகத்தில் இருப்பதாக எண்ணி அவைகளைப் பூரணமாக அனுபவிக்க மேனாட்டார் அவர்கள் புதுதுக் கெட்டிய வழிகளிலெல்லாம் முயற்சிக்கிறார்கள். நாமோ பிற்காலத்தில் அனுபவிக்கப் போகும் பேரின்பத்துக்காக, இம்மண்ணுலகச் சிற்றின்பங்களைத் துறக்க முயல்கின்றோம். கடவுளைப்பற்றியாவது, பேரின்பத்தைப் பற்றியாவது மேனாட்டாருக்குச் சிந்தனையில்லை. நமது ஒவ்வொரு செயலிலும் பழகத்திலும் தெய்வ நம்பிக்கை ஒளிர்கின்றது. ஆகவே, குருட்டுத்தனமாக மேல் நாட்டு நாகரீகத்தைப் பின்பற்றலாகாது. ஆனால் மேல் நாட்டு இயந்திர நாகரீகம் மிகப் பகட்டாயிருக்கிறது. அதைக் கண்டு யாவரும் மயங்கி விடுகிறார்கள். நாம் கடைத்தேற வேண்டுமானால் அந்தப் பகட்டு நாகரீகத்தில் மயங்கி விழலாகாது.

## ஸத்திய தரிசனம்.

### மகாத்மா காந்தியின் ஜீவிய சரித்திரம்.

4-ம் பிரிவு 4-வது அத்தியாயம்.

மகாத்மா காந்தி 'நவஜீவன்' பத்திரிகையில் தொடர்ச்சியாக எழுதிவரும் தமது வரலாறு பின் வருமாறு:—

டிரான்ஸ்வாலில் குடியேறியுள்ளவர்களுடைய உரிமைகளுக்காக நடந்த போராட்ட விவரத்தையும், ஆசியாக்காரர் இலாகா செய்துவந்த காரியங்களைப் பற்றியும் சொல்லுமுன், என்னுடைய வாழ்வின் வேறு சில அம்சங்களைக் குறிப்பிட வேண்டியது அவசியமாக இருக்கிறது.

இதுவரையில் என் மனதில் இருவித ஆசைகள் ஊசலாடி வந்தன. தியாக உணர்ச்சியைக் காட்டவேண்டுமென்ற அவாவானது எதிர்காலத்திற்கு எதையேனும் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசையால் மட்டுப்படுத்தப்பட்டு வந்தது.

நான் பம்பாயில் சேம்பர் வேலையை ஆரம்பித்த சமயத்தில், அழகிய முகவிலாஸமும், பேச்சுவன்மையும் ஒருங்கே அமைந்திருந்த ஒரு அமெரிக்க இன்ஷியூரென்ஸ் ஏஜெண்டு என்னிடம் வந்தார். என்னுடன் வெகு காலமாகப் பழகியவர்போல் என்னுடைய எதிர்கால வாழ்வைப்பற்றி அவர் என்னுடன் விவாதித்தார். "அமெரிக்காவில் உங்களுடைய அந்தஸ்திலிருப்பவர்கள் அனைவரும் இன்ஷியூர் செய்திருக்கிறார்கள். நீங்களும் ஏன் அவ்விதமே இன்ஷியூர் செய்யக் கூடாது? மனித காயம் அநித்யமானது. அமெரிக்காவில் நாங்கள் இன்ஷியூர் செய்வதை ஒரு மதக் கடமையாக வைத்துக்கொண்டிருக்கிறோம். நீங்களும் சொற்பத் தொகைக்கு இன்ஷியூர் செய்யும்படித் தூண்டுவதற்காக வந்திருக்கிறேன்" என்று சொன்னார்.

இன்ஷியூர் செய்வது பயத்தையும் கடவுளிடத்தில் நம்பிக்கையின்மையையும் காட்டிக் கொள்ளுவதாகுமென்று நான் இதுவரையில் நினைத்து வந்திருந்ததால், இதற்குமுன் என்னிடம் தென்னாப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் வந்த இன்ஷியூரென்ஸ் ஏஜெண்டுகளை நான் திருப்பி அடித்து வந்தேன். இப்பொழுது அமெரிக்க ஏஜெண்டின் வலையில் நான் விழுந்து விட்டேன். அவர் ஏன் இன்ஷியூர் செய்ய வேண்டுமென்பதற்குக் காரணங்களைச் சொல்லிக்கொண்டு வந்தபொழுது, எனது மனைவி, குழந்தைகள் இவர்களுடைய எண்ணம் என் அகக்கண்முன் தாண்டவமாடிக் கொண்டிருந்தன, "உங்களுக்கு ஏதேனும் அபாயம் நேர்ந்துவிட்டால் உங்களுடைய மனைவியையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு உங்களுடைய ஏழைச் சகோதரர் தலையில் சுமரும். உங்களைப் பெற்ற தகப்பன் போல் இதுவரையில் அவர் காப்பாற்றி வந்திருக்கிறார். இனியும் உங்களுடைய குடும்பமானது அவரை நம்பியிருக்க வேண்டிய நிலைமையில் விட்டுவைப்பது உங்களுடைய கௌரவத்திற்குத் தகுந்ததாக இருக்குமா?" என்பன போன்ற வாதங்களை அவர் சொன்னபொழுது, 10000 ரூபாய்க்கு இன்ஷியூர் செய்வதென்று தீர்மானித்துக்கொண்டேன்.

ஆனால் தென்னாப்பிரிக்காவில் என்னுடைய வாழ்வின் போக்கே மாறி விட்டதால், என்னுடைய மனோபாவமும் மாறுதலடைந்துவிட்டது. இந்தக் காலத்தில் கடவுள் பெயராலும், பொதுஜன ஊழியம் என்பதன் பெயராலுமே நான் எல்லாக் காரியங்களையும் செய்து வந்தேன். தென்னாப்பிரிக்காவில் நான் எவ்வளவு காலமிருக்க வேண்டியிருக்குமென்று எனக்கே தெரியவில்லை. இந்தியாவிற்குத் திரும்பிப்போக முடியாமலே போய்விடலாமென்ற பயமும் என் மனதில் இருந்துகொண்டிருந்தது. ஆகையால் என்னுடைய மனைவியையும் குழந்தைகளையும் என்னிடமே வைத்துக்கொள்ள வேண்டுமென்றும், அவர்களை விட்டுப் பிரிந்திருக்கக் கூடாதென்றும், அவர்களைக் காப்பாற்றுவதற்கு வேண்டிய பொருளைச் சம்பாதிக்கவேண்டுமென்றும் நான் தீர்மானித்துக்கொண்டேன், இத்தகைய எண்ணம் ஏற்பட்டதும் இன்ஷியூர் செய்தது பிசகென்று நான் கருதி, இன்ஷியூரென்ஸ் ஏஜெண்டின் வலையில் விழுந்துவிட்டதற்கு வெட்கமடைந்தேன். என்னுடைய சகோதரர் என்னுடைய பிதாவின் ஸ்தானத்திலிருந்து வருகிறாரென்பதை நான் ஞாபகப்படுத்திக்கொண்டிருந்தால், என்னுடைய மனைவியையும் குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவருக்கு ஏற்பட்டாலும் அவர் அதை ஒரு பாரமாகக் கருதியிருக்கமாட்டாரென்பதை நான் உணர்ந்திருப்பேன், ஆனால் எல்லாரையும் உண்மையில் காப்பாற்றுகிறவர் ஆண்டவனே. நானுமன்று; என்னுடைய சகோதரருமன்று; என்னுடைய மனைவிக்கும் குழந்தைகளுக்கும் தன் நம்பிக்கையில்லாமற் செய்துவிட்டேன். ஏன் அவர்கள் தங்களைத் தாங்களே ரக்ஷித்துக்கொள்ளும்படி விட்டுவிடக்கூடாது? உலகிலுள்ள கோடிக்கணக்கான ஏழை ஜனங்களின் குடும்பங்களை யார் ரக்ஷிக்கிறார்கள்? என்னுடைய குடும்பத்தினரையும் அந்த கோஷ்டியினரின் ஒரு தொகுதியினராக ஏன் வைத்துக் கொள்ளக் கூடாது?

இவைபோன்ற பல எண்ணங்கள் என்மனதில் ஊசலாடிக்கொண்டிருந்தன. ஆனால் சட்டென ஒரு முடிவிற்கு நான் வரவில்லை. தென்னாப்பிரிக்காவிலிருந்தும் ஒரு சந்தாவை அனுப்பியதாக எனக்கு ஞாபகமிருக்கிறது.

ஆனால் வெளி சந்தர்ப்பங்களும் இத்தகைய தோற்றங்களுக்கு ஆதரவு அளித்துவந்தன. நான் முதன் முதலாகத் தென்னாப்பிரிக்காவிற்குச் சென்றிருந்தபொழுது கிறிஸ்தவர்களுடைய செல்வாக்கினாலேயே மத உணர்ச்சி என்னிடத்தில் இருந்துவந்தது. இப்பொழுது பிரம்மஞான சங்கத்தின் செல்வாக்கும் சேர்ந்துகொண்டது. மிஸ்டர் ரிட்ச் என்பவர் பிரம்மஞான சங்கத்தைச் சேர்ந்தவர். எனக்கும் ஜோஹன்ஸ்பர்க் சங்கத்திற்கும் அவர் சம்பந்தம் ஏற்படுத்தி வைத்தார், எனக்கு அந்தச் சங்கத்தின் சில கொள்கைகள் பிடிக்காததால், நான் அந்தச் சங்கத்தைச் சேரவில்லை. இருந்தாலும் அந்த சங்கத்தைச் சேர்ந்த எல்லோரிடமும் எனக்கு நெருங்கிய சம்பந்தமேற்பட்டது. அவர்களுடன் தினந்தோறும் மத விஷயங்களைப் பற்றி நான் விவாதித்து வந்தேன், பிரம்மஞான சங்கப்பிரசுரங்களிலிருந்து அடிக்கடி சில பாகங்களைப் படிப்பதுடன் நானும் அவர்களுடைய கூட்டங்களில் பேசினேன். சகோதர உணர்ச்சியைப் பெருக்குவதே பிரம்மஞான சங்கத்தின் நோக்கம், இந்த தர்மத்தைப்பற்றி அடிக்கடி எனக்குள் விவாதம் நடந்து வந்தது, இந்த தர்மத்திற்கு விரோதமாக நடந்துகொண்டு வந்தவர்களை நான் கண்டித்து வந்தேன். அதற்குத் தகுந்த பலன் கிடைக்காது போகவில்லை. அவர்கள் ஆத்மசோதனை செய்ய ஆரம்பித்தார்கள்,

## ராகுகாலங் கண்டுபிடிக்க ஓர் நூதனமான முறை.

அடியிற் கண்ட வாக்கியத்தை மனப்பாடம் பண்ணி வைத்துக் கொண்டால், இராகு காலங்களை மிகவும் எளிதில் கண்டு பிடிக்கலாம்.

திருசாகேதகேபூ.

மேற் கண்ட வாக்கியத்திலுள்ள எழுத்துக்களை (ஏழு நாட்களுக்கும்) ஏழு பிரிவாகப் பிரித்தல் வேண்டும்.

| | |
|---|---|
| தி—ஞாயிறு | கே—புதன் |
| ரு—திங்கள் | த—வியாழன் |
| சா—செவ்வாய் | கெ—வெள்ளி |
| பு—சனி | |

பிறகு நாம் பார்க்கிற கிழமைக்குரிய எழுத்து எது என்று தெரிந்து அது எத்தனையாவது எழுத்து என்று அறிய வேண்டும். அறிந்ததும் அந்த இலக்கத்தை $1\frac{1}{2}$ ஆல் பெருக்க வந்த தொகை (மணி) இராகு காலத்தின் ஆரம்பம். அந்த மணியிலிருந்து ஒன்றரை மணிவரைக்கும் இராகு காலம் என்று எளிதில் காண்க. (உதாரணம்) செவ்வாய்க்கிழமை இராகு காலம் கண்டு பிடிக்க வேண்டுமென்று வைத்துக் கொள்வோம். அதற்கு நேரில் இருக்கும் எழுத்து சா. சா. சா, என்று எண்ணுகையில் அது இரண்டாவது எழுத்து என்று தெரிந்து கொண்டோம். ஒவ்வொரு எழுத்துக்கும் $1\frac{1}{2}$ மணி யாக 2 எழுத்திற்கு 2—$1\frac{1}{2}$—3-மணி. எப்பொழுதும் இராகு காலம் $1\frac{1}{2}$ மணி நேரந் தான், ஆதலால் 3 மணி முதல் $4\frac{1}{2}$ மணிவரையில் என்று தெரிகிறது.

## கொலையுண்டவர் குடும்பத்திற்குதவி.

26—5—26-ல் அலிப்பூர் சிறையில் கொலையுண்ட ஸி. ஐ. டி. போலீஸ் சூப்பிரின்டெண்டெண்ட் ராய்பூபேந்திரநாத் சாட்டர்ஜியின் குடும்பத்திற்கு கீழ் கண்டவாறு உதவி செய்ய வங்காள கவர்ன்மெண்டார் அனுமதித்திருக்கின்றனர். ஆயுள் பரியந்தம் மாதம் ரூபாய் 150 வீதம் அவரது மனைவிக்கும், 24 வயது அடையும் வரை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 90 வீதம் அவரது 5 குமாரர்களுக்கும், ஜூன் மாதம் வரை மாதம் 27 ரூபாய் வீதமும், கல்யாணமானால் ரூ 3500 க்கு சீதனங்களும் அவரது இரண்டாவது மகளுக்கும், கல்யாணமாகும் வரை மாதம் 1-க்கு ரூபாய் 70 வீதமும் சீதனமாக ரூ 3500 ம் அவரது மூன்றுவது மகளுக்கும், நகைக் கிரிகைக்கான செலவு ரூ 1120 அவருக்கு சகலும் கொடுக்க வேண்டும்,

## அவசியம் தேவை.

நாகலாபுரத்தை அடுத்த புதூரிலிருக்கும் நாடார்கள் க்ஷத்திரிய வித்யாசாலை தலைமைஉபாத்தியாயர்பதவிக்கு குறைந்தது எலிமெண்டரி ஹையர்கிரேடு ட்ரெயினிங் பாஸ்பண்ணினவராயும் போதுமான இங்கிலீஷ் அறிவுள்ளவராகவும், முப்பது வயதுக்குக் குறையாதவராகவும் ஷெயார் மனைவியும் குறைந்தது எலிமெண்டரி ஹையர்கிரேடு ட்ரெயினிங் பாஸ் பண்ணினவராகவும் இருக்கவேண்டியது. இருவருக்கும் வேலையுண்டு. தகுதியுடையோர் தங்கள் நற்சாட்சிப் பத்திரங்களோடு அடியில் கையொப்பமிட்டிருக்கிறவருக்கு உடனே அப்பிளிக்கேஷன் எழுதிக்கொள்ளவும், நாடார்குலத்தவராயிருப்பது ரொம்பவும் உசிதம். திறமைக்குத்தக்கபடி சம்பளம் கொடுக்கப்படும்,

வெ. சு. மு. சங்கரலிங்கநாடார்,
ஸ்கூல் மானேஜர்,
புதூர் (Via) எட்டையாபுரம்.

## கோவில்களில் எல்லோரும் சேர்ந்து கடவுளை வழிபடுங்கள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நாடார் மஹாஜன சங்கம்.

## தலைவர்களின் பராமுகம்.

## பிரசாரம் செய்ய உடனே முன்வரவேண்டும்.

(மதுரை நாடார் ஊழியப்பிரசார சபையின் வேண்டுகோள்.)

தற்சமயம் நமது மஹாஜனசங்கம் சற்றே தளர்ச்சியுற்றிருக்கிறதுடன் நமது மஹாஜனங்களும் போதிய உற்சாகத்துடன் இல்லை. காரணம் தலைவர்களின் பராமுகமேயாகும். எக்காரியங்கள் காரியசித்தியடைய வேண்டுமாயினும் நாம் எடுக்கும் பிரயாசையையும் முயற்சியையும் பொறுத்தே இருக்கிறதென்பதையாராலும் மறுக்க முடியாது. மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் ஜில்லாக்களிலுள்ள நம் குலத் தலைவர்கள் நம் ஜன சமூகத்திற்குச் செய்யவேண்டிய கடமைகளைச்செய்ய மறந்துவிட்டனர் போலும். நம் தேசமும் இதர வகுப்பினர்களும் வெகு துரிதமாக முன்னேறப் பிரிதப்பிரயத்தனம் செய்து வருகிறார்கள். கொஞ்சம் அயர்ந்தால் இப்போதுள்ள நிலைமையிலிருந்து பின் தள்ளப்படுவோமென்று எங்கள் மனம் பதறுகிறது.

**தலைவர்களே!**

நம் ஜன சமூகத்தைப்பற்றி நமக்கென்ன கவலை? நம் சொந்தத்தொழிலையும் வருமானத்தையும் கௌரவத்தையும் காப்பாற்றிக்கொண்டால் போதுமென்று நினைப்பது பெருந்தவறாகும். அடுத்த வீட்டில் நெருப்புப் பிடித்தால் அதை அணைக்கமுயற்சி செய்யாவிடில் நம் வீட்டிலும் அது கட்டாயம் பரவிக்கொள்ளும் நம உடம்பின் ஓர்பாகத்துக்கு ஏற்பட்டிருக்கும் நோய்க்குத் தகுந்த சிகிட்சை செய்து கொள்ளாவிடில் உடம்பு பூராவும் பரவி உயிருக்கே ஆபத்தை விளைவித்துவிடும். இவைகள் போன்று நம் ஜன சமூகத்தின் குறைகளைக் கவனியாது பாராமுகமாக இருப்போமாயின் அது நம்மையும் தலைவர்களையும் கஷ்டப்படும்படி செய்யுமென்பதில் சந்தேகமில்லை. நாம்தான் ஜாதி முன்னேற்ற சங்கத்தை ஸ்தாபித்து உலகத்தாருக்கு நிரூபித்துக்காட்டிய தில முதன்மைபெற்றவர்கள். நமது பிரசாரகர்களையும் காண்பரன்ஸின் அரிய கொள்கைகளையும் கவர்ன்மெண்டாரும் மற்றவர்களும் பார்த்துப் பிரமைகொண்டார்கள். அதானது இன்னும் தளர்ச்சியுறுவண்ணம் முன்னேறமடைந்து பிரகாசிக்கச் செய்ய வேண்டியது தலைவர்களைப் பொறுத்துத்தான் இருக்கிறது. முயற்சி செய்யாவிடில் உயர்ச்சி எங்கிருந்துவரும்? நாடார்கள் ஊக்கத்தில் சிறந்தவர்கள் எடுத்த காரியங்களைவிடாது முடிப்பவர்கள் என்று திருநெல்வேலிஜில்லா கலெக்டர் டேவிஸ் துரை கூறியதை யாவரும் மறந்திருக்கமாட்டார்களென்று நம்புகிறோம். இன்னும் விசேஷ பெருமைகளையடைந்து நமது ஜன சமூகம் இந்தியாவில் முதல்தர வகுப்பினராய்ப் பிரகாசிப்பதில் நாம் கொஞ்சமும் அஜாக்கிரதையாகவிருந்து விடக்கூடாது. தற்கால நிலைமையில் நமக்கு நம்மைத்தவிர வேறு எவ்வித ஆதரவுமில்லை. தன்கையே தனக்குதவி என்பதை நம் ஜன சமூகம் என்றும்மறந்துவிடக்கூடாது. ஜஸ்டிஸ்கக்ஷியாரோ, சுயராஜ்யக்கக்ஷியாரோ நம ஜன சமூகத்துக்கு எவ்வித நன்மையும் செய்துவிட முடியாதென்பது நமது முடிவான நம்பிக்கை. ஆனதால் நாம் அவர்களை நம்பிக்கொண்டிருப்பது இலவு காத்தகிளிகள்போல் ஏமாற்றத்தையே விளைவிக்குமென்று சொல்வதில் குற்றமாக மாட்டாது. இந்நிலைமையில் நம் ஜன சமூகத்தை உயர் நிலைக்குக் கொண்டுவர வேண்டுமாயின் அதற்கென நம்மால் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கும் மகாஜன சங்கத்தைத் திறமையுடன் நடத்தவேண்டியதைத் தவிர வேறுவழியில்லை. இந்த ஸ்தாபனம் சிறப்புடன் பிரகாசிக்கவேண்டுமாயின் ஒவ்வொரு நகரத்திலும் கிராமத்திலும் உள்ள நம் மஹாஜனங்களை உற்சாகப்படுத்த வேண்டும். அவர்களுக்கு ஏற்படும் உற்சாகத்தினாலும் அனபினாலுமே நமது சங்கம் பராமரிக்கப்பட வேண்டும். அப்பராமரிப்பினால் நமது சங்கம் போதிய பலமும் செல்வாக்கும் பெற்று நம் ஜன சமூகத்தை உயர் நிலைமை முன்னேற்றமென்னும் மோக்ஷசாகரத்தை யடைய வெகு துரிதமாக இழுத்துச் செல்லும். ஆதலின் நம் குலத்தலைவர்கள் இதை ஆழ்ந்து கவனித்து நீர ஆலோசித்து தங்களுக்கு சாவகாசமான காலங்களில் தங்கள் ஊரிலும் அருகாமையிலுள்ள மற்றகிராமங்களிலும் சென்று நம் மஹாஜன சங்கத்தின் நோக்கங்களைப் பற்றியும் நாம் முன்னேற்றமடைவதற்குச் செய்ய வேண்டிய கடமைகளைப்பற்றியும் பிரசங்கங்களும், பிரசாரங்களும் செய்து வரும்படி மன்றாடிக் கேட்டுக் கொள்கிறோம். இதுதான் நமது ஜன சமூகத்தின் க்ஷேமத்தையும், உரிமையையும், மானத்தையும்காப்பாற்றுவதற்குச் செய்ய வேண்டிய ஒவ்வொருவருடைய முக்கிய கடமையாகும். இதற்கு வழிகாட்டியாக நமது மஹாஜன சங்கத்தின் வைஸ்பிரஸிடெண்டு ஸ்ரீமான் ஊ. பு. அ. சௌந்தரபாண்டிய நாடார் எம். எல். ஸி. அவர்கள் உடனே முன்வந்து தமது சகாக்களுடன் சுமார் இரண்டு மாதகாலத்திற்கு நாடார்கள் வசிக்கும் கிராமந் தோறும் (டூரில்) சென்று நம் மஹாஜன சங்கத்தின் நோக்கங்களைப்பிரசங்கமூலமாய்ப் பிரசாரம் செய்து பொது ஜனங்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தையும் உண்டாக்குமாறு வேண்டுகிறோம். ஜஸ்டிஸ் கக்ஷிப்பிரசாரத்திற்காக நெடுந்தூரம் சுற்றுப்பிரயாணம் செய்து வரும் நமது வைஸ்பிரஸிடெண்டு அவர்கள் தமது சொந்த ஜன சமூகத்தின் முன்னேற்றத்திற்காகச் செய்யவரும் பிரயாணத்தைப் பொது ஜனங்கள் ஆவலுடன் எதிர்பார்ப்பார்களாக.

# பலதிரட்டு.

சென்னைமாவு கம்பெனி தொழிலாளர் வேலை நிறுத்தத்தின் போது கம்பெனி முன் நின்றுகொண்டு வேலைக்குப் போகவிடாது தனது சக தொழிலாளர்களைத் தடுத்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட இருவருக்கு மாஜிஸ்டிரேட் தலைக்கு ஐந்து ரூபாய் அபராதம் விதித்துளார்.

* *

சேலத்தில் நாட்டார் வகுப்பைச் சேர்ந்த அருணாசலம் பிள்ளையும் அவரது சகோதரரும் 1-6-27ல் காலை ரயில்ப்பாதைவழி சென்று கொண்டிருக்கும் சமயம் திடீரெனச் சுட்டுக் கொல்லப்பட்டனர். போலீஸார் புலன் விசாரிக்கின்றனர்.

* *

கோயமுத்தூரிலுள்ள வெள்ளையப்ப ராவுத்த ரென்பவருக்கு, இருமனைவிகள் உண்டு. கஷ்டகாலத்தை முன்னிட்டு தன் மூத்த மனைவியின் நகைகளை அடகுவைத்துவிட்டு அவளையும் ஆதரியாமலிருந்தான். இதையறிந்த மூத்த மனைவியின் தகப்பனார் மாப்பிள்ளையை நெருக்கி நகைகளைத் திருப்பித்தரும்படி கடிந்து கேட்டார். இரண்டுபெண்டாட்டிக்காராகிய செயலற்ற (மாப்பிள்ளை) ராவுத்தர் ஆத்திரத்தால் ஆவேசங்கொண்டு கத்தியால் குத்திக்கொண்டிறந்தார். பந்துக்கள் எதை நினைந்தழுவது!

* *

ஸ்காத்லாந்திலுள்ள எடின்பரோ நகரில் ஹோட்டல்களிலும் நர்த்தன சாலைகளிலும் நிறத்தடை ஏற்பட்டிருப்பதால அத்தகைய அடாதவழியை விட்டொழிக்க வேணுமென்று ஸ்ரீமான் ஸக்லத்வாலா காமன் சபையில் பிரேரித்தார். இதற்குப் பதிலளிக்கும்போது கடுமையான வகுப்பு வித்தியாசம் ஏதும் கிடையாதென்றும், ஸ்தல அதிகாரிகள் லைசென்ஸ் கொடுக்கும் காலத்தில் நுதில அனுதாபமுள்ளவர்கள் கவனித்துக்கொள்ளலாமென்றும் சர்வகலாசாலையில் கருப்பு மனிதர்களாகிய இந்தியர்கள் கௌரவமாகவே நடத்தப்படுகின்றனரென்றும் இது ஒருக்கால் வியாபாரத் தோரணைக்காக அனுஷ்டித்து வரலாமென்றால் குறிப்பிட்ட ஓரிடத்தில் குறிப்பிட்ட வகுப்பார் போகாதிருந்தால் அங்கு தங்களுக்கு விசேஷ லாபம் கிடைக்குமென்றிருந்தால் இதை யாரும் ஏதும் சொல்வதற்கில்லை யென்றும் சொல்லி மழுப்பப்பட்டது.

* *

யார்க் கோமகனைத் தலைமையாகக் கொண்ட தேசிய விளையாட்டு ஸ்தலச் சங்கத்தார் பிரிட்டனில் வாலிபர்களுக்கு விளையாட்டு ஸ்தலங்களேற்படுத்திக் கொடுக்க 10 லக்ஷம் பவுன் கொடுத்துதவ வேண்டுகோள் வெளியிட்டிருக்கிறார்கள்.

* *

எகிப்திய கவர்ன்மெண்டு சுதேச ஜனங்களிடம் வாங்குவதேபோல் அந்நிய தேச ஜனங்களிடமும் வரிவசூல் செய்ய முற்பட்டிருக்கிறது.

* *

சென்னை மாகாணத்திலுள்ளவைகளில் 19 முனிஸிப்பாலிட்டிகளில் கட்டாயக்கல்வி போதிக்கப்படுகிறது.

* *

71 முனிஸிப்பாலிட்டிகளில் ஆண்களில் 100-க்கு 24-ம் பெண்களில் 100-க்கு 62-ம் பள்ளிக்கனுப்பப்படவில்லை.

* *

மொத்தமுள்ள 80 முனிஸிப்பாலிட்டிகளிலுங் கூடி இவ்வாண்டில் 7 மைல் நீளத்திற்குத்தான் புதிதாகச் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. சென்ற வருஷம் 2335 மைல் நீளமுள்ள சாலைகள் இருந்தன.

* *

ஜப்பானில் பெண்களிலெல்லாம் செல்வத்தில் பெருகியவர் ஸ்ரீமதி மடெய்ன்ரோனி கஜாகியாவர். இவர்கள் தன் தொழில்முறைக்காக 60 கோடிரூபாய் மூலதனமாகப் போட்டிருக்கிறார்.

* *

சமீபத்தில் பெய்த மழையின்போது விருதுநகருக்கடுத்த மறவப்பட்டியிலுள்ள ஒரு வீட்டில் இடிவிழவே வீட்டிலிருந்த இருவரில் ஒருவர் உயிர்துறந்தார். மற்றொருவர் குற்றுயிராயிருக்கிறார்.

* *

இராமநாதபுரத்தில் தேசபக்த வாலிபர்கள் ஸ்ரீ சோமையாஜுலு அவர்கள் தலைமையின் கீழ் சட்டமறுப்புக்குத் தயாராயிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

* *

இந்திய சட்டசபை அக்கிராசனர் ஸ்ரீமான் வி. ஜே. படேல் இங்கிலாந்தில் அரசபேட்டியின்போது சுத்தக் கதர் உடைதரித்து விளங்கினராம்.

* *

20 வயதுள்ள ஒரு பர்மியப் பெண் பகுமந்தானில் தன் கணவனோடு வாழ்ந்து வந்ததில் குடும்பத்தை ரக்ஷிக்க கணவன் ஆதரவு காட்டாக்குறைக்காக மனவருத்த முற்று ஆற்றிலிறங்கி உயிர் விடத் துணிந்தனள். போலீஸார் இதைக்கண்டு அவளுக்கு கஷ்டத்தின் மேல்கஷ்டத்தை யேற்றுவதற் கொப்ப உயிரை மீட்டினர்.

* *

தென்னாட்டில் போலீஸாரால் கள்ளனெனச் சொல்லப்பட்டு பிடிபடாது பலகாலும் ஜெம்புலிங்கம் திரிந்தவந்ததே போன்று பர்மாவிலும் சாம்பே என்னுமொரு இளைஞன் எளியோர் பால் கருணை வைத்து பணக்காரரிடமே கொள்ளை நடத்தி வருகிறானாம். இவனைக்கைது செய்ய கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட பல உத்தியோகஸ்தர்கள் அவன் கையில் மாண்டிருக்கின்றனர். அவனைப் பிடித்துக் கொடுப்போர்க்கு ரூ 3000 இனாமளிப்பதாக சர்க்கார் அறிக்கை கூறுகிறது.

* *

அமெரிக்காவிலுள்ள மாணவர்கள் இகபோகங்களால் உண்மையான சுகமில்லை யெனக் காட்டும் கருத்துக் கொண்டு தங்கள் இளவயதிலேயே சுகபோகங்களை அனுபவித்துச் சலிப்புற்ற வாழ்க்கையில வெறுப்புற்று தற்கொலை செய்து கொள்கின்றனராம். அங்கு தற்கொலைச் சங்கங்களும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவாம.

* *

ஐந்தாம் ஜார்ஜ். சக்கிரவர்த்தியவர்களின் குமாரர் வேல்ஸ் இளவரசர் ஸ்பெயின் தேசத்து ராஜகுமாரி இன்பெண்டா பீட்ரைஸை மணமுடிக்கலாமெனத் தகவல் கிடைப்பதாக "இங்கிலீஷ் மென்" பத்திரிகை கூறுகிறது.

* *

இராமநாதபுரம் ஜில்லா போர்டு உபதலைவர் பதவிக்கு ராவ் சாஹேப் யம். மாணிக்கம்பிள்ளை பி. ஏ. பி. யல். அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்.

* *

பண்டித மதன் மோகன் மாளவியா அவர்கள் மைசூரில் தங்கி வருகிறார். 11-6-27-ல் பெங்களூரில் மகாத்மாவைக் கண்டு பேசினார். 2 மாசம் ஓய்வு கொள்ள டாக்டர் அபிப்பிராயப்படி உதகமண்டலம் போகிறார்.

* *

சூரிய கிரணங்களை கிரகித்து அக்கிரணங்களின் உஷ்ணத்தை தொக்களில் அடைத்து குளிர்ந்த பிரதேசங்களுக்கனுப்பி அங்கு உஷ்ணமுண்டாகும்படி செய்யும் இயந்திரம் கலிபோர்னியாவில் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

* *

இந்திய காங்கிரஸ் மகாசபையில் அக்கிராசனம் வகித்த ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார் உத்தரமான யோக்கியதையுடையவர்; அரசியல் கக்ஷிகளை ஒழித்து ஒற்றுமைப்படுத்த போதுமான ஆற்றல் இல்லாதவர் என்று மிஸ் கிரேஸ் ஹட்சின்ஸ் என்ற அமெரிக்க மாது கூறுகிறாள்.

* *

பத்துமணி நேரம் உடலால் உழைப்பதைவிட நான்குமணி நேரம் மூளையால் சிந்திப்பது அதிகச் சோர்வைக் கொடுக்கிறதாம்.

* *

தூத்துக்குடி பிரபல வியாபாரி ஸ்ரீமான் மா. கிருஷ்ண பிள்ளை காலஞ்சென்றதால் அவரின் ஞாபகார்த்தமாக பெண்கல்வி அபிவிர்த்திக்கு ரூ 10000 பெறுமான கட்டடமும் ரொக்கமாக ரூ 25000-ம் கொடுத்திருக்கிறார்.

* *

உதகமண்டலத்தில் ஸ்ரீமான் வி. பி. இராமசாமி அய்யர் அவர்கள் காரியாலயத்தில் 15-6-27ல் புகை கிளம்பவே அவ்விடமிருந்தவர்களே கூடி நெருப்பை அணைத்துவிட்டனராம்.

* *

கல்கத்தாவில் ஸ்ரீமான் பி. எல். ஹார்ஹோர்லாசி என்பவர் ஸ்ரீமான் எச். ஓ. சார்டர் என்பவரிடம் தான் வியாபாரம் செய்வதாயும் பாதிலாபம் தருவதாயும் கூறி ரூ 740 வாங்கிக் கொண்டு மோசம் செய்ததாக வந்த வழக்கில் ரூ 1000 அபராதம் மாஜிஸ்டிரேட்டால் விதிக்கப்பெற்றது.

* *

30—5—27-ல் கூடிய விருதுநகர் முனிசிபல் கூட்டத்தில் சமீபத்தில் லார்டு கோஷன் பிரபு இந்நகருக்கு விஜயம் செய்யப்போவதன் ஞாபகார்த்தமாக ரயில்வே பீடர் ரோடும், மதுரை ரோடும் சந்திக்குமிடத்தில் 1000 ரூபாய் செலவில் "கோஷன் பார்க்" எனும் பெயருடன் ஒரு நந்தனவனம் உண்டாக்க வேணுமென்று தீர்மானிக்கப்பட்டிருப்பதோடு நகரில் சில இடங்களில்புதிய ரோடுகள் போடுவதற்கும் பணம் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கின்றது.

* *

நெசவுத் தொழிலுக்கு பாதுகாப்பு அளிப்பதைப்பற்றி விசாரணைசெய்ய நியமிக்கப்பட்ட கமிட்டியார் இந்தியாவிற்குள் இறக்குமதியாகும் ஜவுளிக்கு 100-க்கு 4-வீதம் வரி விதிப்பதென்றும் 40-ம் நம்பருக்கு மேற்பட்டவைகளுக்கு வரி கிடையாதென்றும் சிபார்சு செய்திருக்கிறார்கள். இந்தியாவில் இறக்குமதியாகும் பிரிட்டிஷ் ஜவுளி எல்லாம் 40-ம் நம்பருக்கு மேற்பட்டவைகளே யாகையால் இது பிரிட்டிஷ் சலுகையென ஏன் சொல்லக்கூடாது?

---

**தர்ப்பைப்புல்லிற்கு தரகு கொடுத்தால், இறந்தவர்கள் மோட்சலோகம் போவார்களென்ற மூடநம்பிக்கையை ஒழியுங்கள்.**

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

நாடார்குலமித்திரன்

பிரபவ ௵ ஆனி மீ ௬௳

## பலிக்கக் கூடாமற் செய்தது யார்?

தேசபந்து சித்தரஞ்சன தாஸ் இறந்த தினத்தைக் கொண்டாடும் சில தேசியப் பத்திரிகைகள், அவருடைய தியாகத்தையும் பெருமையையும் நினைத்து அழுவதுடன் நில்லாமல் அவர் முறை பலிக்காமற் செய்தது பிறர் என்று பெரியதோர் குற்றத்தைச் சுமத்தி எழுதுகின்றன. குறிப்பாக,

'மகாத்மாவின் ஒத்துழையாமையில் தேச ஜனங்கள் எல்லோரும் ஈடுபட்டிருப்பின் ஆறு வருஷங்களுக்கு முன்னமேயே சுயாராஜ்யக் கிளர்ச்சி பலித்திருக்கும். ஆனால் தென்னிந்தியாவில் ஜஸ்டிஸ் கட்சியினரும், மற்ற மாகாணங்களில் மிதவாதிகளும் கவர்ன்மெண்டுடன் ஒத்துழைக்கப்புறப்பட்டு மகாத்மாவின் முறை பலிக்கக்கூடாமற் போய்விட்டது' என்று "சுதேசமித்திரன்" கூறுகிறது. மகாத்மாவின் ஒத்துழையாமை ஒங்கவிடாமற் செய்தது ஸ்ரீமான்கள் ஸ்ரீநிவாச சாஸ்திரியார், ஸ்ரீநிவாசய்யங்கார், ரங்கச்சாரியார், சிவசாமி ஐயர் முதலிய சென்னை மிதவாதிகளா அல்லவா வென்று கேட்கிறோம். இவர்கள் தென்னிந்தியப் பிராமணர்களா அல்லவா வென்று கேட்கிறோம். மகாத்மாவைப்பார்க்கிலும் ஒருபடி முன்னேறிப் பார்க்கலாமென்ற வங்காட்டுச் சிங்கம்—மாற்றிலுயர் தங்கம்—தாஸின் ஒத்துழையாத் திட்டத்திலும் பரஸ்பர ஒத்துழைப்பைப் புகுத்தியது ஜெயகர், கெல்கார், தாம்பே முதலிய மகாராஷ்ட்ரப் பிராமணர்களா அல்லவா என்று கேட்கிறோம். இப்போது சென்னை மந்திரி சபைக்கு வால் பிடித்துத் திரிவது சுயாராஜ்யக் கட்சியா ஜஸ்டிஸ் கட்சியா வென்று கேட்கிறோம். காங்கிரஸிலிருந்து கதரைவிலக்கியதும் காந்தியைத்தூரத்தியதும் சுயாராஜ்யக் கட்சியா, ஜஸ்டிஸ்கட்சியா? தீண்டாமைப் பிரச்னையை காங்கிரஸிலிருந்து ஒதுக்கிவிட வேண்டுமென்று கௌஹாத்தியிற் பேசினது ஸ்ரீநிவாசய்யங்காரா, கனம் பனகால் ராஜாவா? மகாத்மா காந்திக்கு மண்டையில் மூளை யில்லை யென்று சொன்னது அட்வோகேட் ஜெனரல் ஸ்ரீ. ஐயங்காரா திரு. தணிகாசலமா, ஸர். தியாகராயரா, ஸ்ரீமான் ராமசாமி முதலியாரா வென்று கேட்கிறோம். இவ்வாறு ஒவ்வொரு சமயத்திலும் நல்லியக்கங்கள் பலிக்கக் கூடாமல் சுயநலக்காரர்களாகிய பிராமண சுயாராஜ்யக் கட்சியார் தாராளமாய்ச் செய்துவிட்டு பழியை ஜஸ்டிஸ் கட்சி மீது சாற்றுவது தேனைத் திருடிக் குடித்து விட்டொருவன் இழிச்சவாயன் தலையிற் தடவி விட்டோட்டம்பிடித்த கதை போலிருக்கிறது. இப்புரட்டும் உருட்டும் இனியாவது நடக்க விடாமற் செய்யப் பிராமணரல்லாத சமூகம் விழித்துக் கொள்ள வேண்டும்.

முடிவில் தென்னிந்தியாவிலும் ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்கள் தங்களுடைய வகுப் புணர்ச்சியை விட்டு விட்டு தேச லட்சியம் நிறைவேறும்படி உழைக்கக் காங்கிரஸில் சேர்ந்தால் லார்டு பர்க்கன் ஹெட்டும் ஏமாந்துபோவார் என்று சு. மித்திரன் எழுதுகிறது. அந்தோ! ஐயங்கார்கள் கொள்கைக்கு அனுகூலமில்லாத ஸ்ரீமான்கள் நாயக்கர், நாயுடு, முதலியார், பிரகாசம், சாம்பமூர்த்தி, லஜபதி முதலியவர்கள் காங்கிரஸைவிட்டு விலகிவிட வேண்டுமோம்; மகாத்மா காந்தியும் தனி மடம் கட்டிக் கொள்ள வேண்டுமாம்; தோற்றுப் போன ஜஸ்டிஸ் கட்சி, கட்சித் துணை செய்ய வேண்டுமோம். இதென்ன வேசமா மோசமா? அல்லது காங்கிரஸ் போர்வை போர்த்து வகுப்புத்துவேஷத்தை வளர்த்து வரும் ஐயங்கார் கூற்றை மறைக்கவா? என்று கேட்கிறோம்.

தேசபந்து தாஸ் ஒரு உண்மையான வீரர் என்று சுயாராஜ்யக் கட்சியார் உண்மையில் மதித்து உண்மையில் அவர் தினத்தைக் கொண்டாடுகிறவர்களானால் அவருடைய உண்மையான கிராம நிர்மாணத் திட்டத்தையாவது நிறைவேற்ற முன் வந்திருக்க வேண்டும். இறந்துபோன ஒரு பெரியாருக்கு அன்பு செலுத்துவது அவர் விட்டுப்போன காரியங்களைச் செய்வதே பக்தியாகு மென்று அன்றெழுதிய பத்திரிகைகள் இன்றென்ன எழுதுகின்றன? வகுப்புவாதத்தை வளர்க்கும் இடியுரையும், மறுப்புரையும், வெற்றி கொளித்த வெகுளியால் வீணுரையும் வெகுவாய்க்கக்கி வருகின்றன. இதனால் என்னபயன் விளையப்போகிறதென்றறியாத தன்னலப் போலித் தலைவர்கள் பால் காணும் தவறுதல்களைப் போக்குவதற்காக சர்வ மந்திரங்களையும் ஓதி வரும் ஒவ்வொரு கூற்றையும் பிராமணரல்லாத தேசாபிமானிகள் நிதானமாய்க் கவனிக்கத் தவறமாட்டார்களென்று நம்புகிறோம்.

## மகாநாடு

நாடார் மகாஜனசங்கம் மகாநாடுகள் தொடர்ந்து நடைபெற்று வந்தும் இடையில் ஒரு வருஷம் லாட்டரி வேலையால் தடைப்பட்டு நிற்க ஜனங்களுக்குள் வளர்ந்து வந்த தீவிர உணர்ச்சி குன்றி சமூக முயற்சி மிகப்பழமையாய்ப் போய்விட்டது போற்காணப்படுகிறது. சமூக வேலைகளும் மிகத் தளர்ந்துவிட்டது. தளர்ந்து போனதற்குக் காரணம் தலைவர்கள் பட்டம் பதவிகளுக்கு மிக்க ஆசை கொண்டதும் ஸ்தலஸ்தாபனப்போராட்டங்களும் என்று சொல்லப்படுகிறது. எதுவானாலுமிருக்கட்டும்; சென்றது செல்க. நிகழ்காலத்தின் நிலைமையையும் வருங்காலத்தின் மேன்மையையும் மனதிற் கொள்வோமாக.

பதினோராவது மகாநாடுகூட வேண்டியது மிக அவசியமான வேலையாக முன்வந்து நிற்கிறது. அதை எவ்வாறு எவ்விடத்தில் நடத்துவதென்பதைப்பற்றி சங்க நிர்வாகிகளும் ஆலோசனை செய்து வருகிறார்களென்று தெரிய வருகிறது. இவ்வருடத்தில் வேறெவ்விடத்திலும் நடத்துவதற்கேது கரமில்லாவிடினும் நமது தலைநகரமாகிய மதுரையிலாவது நடத்தித்தானாகவேண்டும். இது விஷயத்திற்கு ஊழியப் பிரகாசபையாரும் சங்க நிர்வாகிகளும் ஒன்றுபட்டால் முடியாத காரியமொன்றுமில்லை. அவ்வண்ணம் முடிப்பதற்குரிய சின்னங்கள் தெரியவருகின்றனவென்றும் ஒரு நிருபர் தெரிவித்திருக்கிறார். கூடிய சீக்கிரம் ஊழியப்பிரகாசபையார் ஒரு வெளியீடு விடுவார்களா?

நாளது ஆனிமீ 11௳ சனிக்கிழமை கூடப்போகிற கௌன்சில் கூட்டத்திற்கு எல்லோரும் விஜயம் செய்து தீர்க்காலோசனை செய்து ஒரு முடிவுக்கு வரவேண்டியது மிகவும் அவசியம்! அவசியம்!!

# குறிப்புகள்.

### ஐயங்காரும், ஆர். கே. ஷண்முகமும்.

தேசமகாசபைத் தலைவர் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்கார்சென்னை சுயராஜ்பக் கட்சியாருக்கு வக்கலாத்து வாங்கிக் கொண்டு அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில் தலைமை ஸ்தானத்தைக் கூடக் கவனியாமல் ஒருபடி இறங்கி சாமர்த்தியமாக விவாதத்தை நடத்தினார். ஆனால் ஸ்ரீ சாம்பமூர்த்தி, ஸ்ரீ பிரகாசமிவர்களிடத்தில் முனைனிற்க முடியாமல் குறுக்குவழியாகத்தான் சென்றார். பின் தொடர்ந்து சென்ற ஸ்ரீமான் முத்தையா முதலியார் பேரிலும் அவர் கொல்லைவழியாகத்தான் போனார். தாம் தவறுதலாகச் சென்ற கோணல் வழிகளை நேர்படுத்துவதற்கு சென்னைக்கு வந்ததும் கோக்லே ஹாலில் கூட்டத்தைக் கூட்டிவைத்து காங்கிரஸ்ப் போர்வையை எடுத்து விசிறினார். இது பசுத்தோலல்ல; புலித்தோலென்று ஸ்ரீ பிரகாசத்தையும், ஸ்ரீ சாம்பமூர்த்தியையும் பேசவிடாமற் றடுத்தார். மகாத்மாவால் முடிக்கமுடியாத முஸ்லீம் பிணக்கை முடித்து விட்டதாகப்படித்தார். வால்பிடிக்கும் ஆசாமிகளும் வானமளாவப் புகழ்ந்தார்கள். ஒத்தூதும் பத்திரிகைகளும் ஒன்று போலக்கூவின.

பிராமணரல்லாத பெருந்தகையாளர், ஆஸ்திரேலியா சென்று பாரத நாட்டின பராக்ரமத்தை தைரியமாய் வெளியிட்ட தமிழ்நாட்டின் தலைப் புதல்வர் ஸ்ரீமான் ஆர். கே. ஷண்முகஞ் செட்டியார் அக்கோக்லே ஹாலிலேயே டாக்டர் நாயுடு அவர்கள் தலைமையின் கீழ் கூடிய கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ்கமிட்டியில் நடந்த ஸ்ரீமான் ஐயங்கார் தவறுதல்களையும் சுயராஜ்பக் கட்சியார் காங்கிரஸ் கட்டளையை மீறி நடக்கும் அக்ரமங்களையும் பலமாகக் கண்டித்தார். கூட்டத்தில் விஷமம் மிளைவிக்கவந்த விஷமிகளுக்கும் சரியானவாயாப்புக் கடாவினார். ஸ்ரீமான் ஐயங்கார் சென்னை மந்திரிசபைக்கு மறைமுகமாக உதவி செய்துவரும் உண்மையை விளக்கிப் பல உதாரணங்களையுங் காட்டினார். ஸ்ரீமான் ஐயங்கார் வகுப்புவாதியாயிருந்து வந்திருக்கிறார், வருகிறாரென்பதற்குப் பல உதாரணங்களைக் காட்டி சில கேள்விகளும் கேட்டிருக்கிறார். ஸ்ரீ ஐயங்கார் அதற்குச்சரியான விடைகொடாமல் ஸ்ரீ ஷண்முகம் சட்டமறுப்பை ஆரம்பிக்கட்டும்; அவரை நான் பின்பற்றுகிறேனென்கிறார்.

திரு. ஷண்முகம், ஸ்ரீ ஐயங்கார் சட்டமறுப்பை ஆரம்பிக்கவில்லையென்ற குற்றங்கூறவில்லை. காங்கிரஸ் கட்டளையை ஏன்விட்டார்? விட்டவர்களை ஏன்தொட்டார்? அதனாற்றான் ஐயங்கார் கெட்டார் எனச் சொல்லப்பட்டார். தேசப் புனருத்தாரணத்திற்கு குடியொழிவதும், தீண்டாமை அழிவதும், கதர்மலிவதும், கைராட்டினம் சுழல்வதுமே பிரதானமென்றும் அதற்காகவே சட்டசபை செல்கிறோமென்றும் கூறிய ஸ்ரீ ஐயங்கார் இதுவரையும் என்ன செய்திருக்கிறார் என்றுதான் திரு. ஷண்முகமல்லமற்றும் பலரும் பன்முறை கேட்கிறார்கள்.

சட்டமறுப்பை ஆரம்பிக்கட்டுமென்று ஸ்ரீ ஐயங்கார் கூறுவது திரிகரண சுத்தியோடா? மகாத்மா சட்டமறுப்பை ஆரம்பித்தபோது அவருக்கு மண்டையிலே மூளையில்லை யென்று தானே மொழிந்தார். இப்போது மறுப்பை ஆரம்பித்தால் தைரியமாய் நிற்பாரா, தயாரில்லையென்று நழுவாரா வென்று கேட்கிறோம்.

காங்கிரஸ் காரியக் கமிட்டி சென்னை சுயாராஜ்யக் கட்சியாருக்கு நற்சாட்சிப் பத்திரம் கொடுத்ததை ஆக்ஷேபித்து திரு. ஆர். கே. ஷண்முகம் பம்பாயில் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டார். சென்னை சுயாராஜ்ய வாதிகளோ திரு. செட்டியாரை ஜஸ்டிஸ் கட்சியில் சேர்த்து விட்டாரென்று கூக்குரலிட்டனர். திரு. செட்டியார், சொன்னபடியே நடக்கத் தெரியாத சுயராஜ்பக் கட்சியிலிருப்பதைவிட ஜஸ்டிஸ் கட்சியில் சேர்ந்து விடுவது நல்லதென்றார். இதிலிருந்து அரசியல் போராட்டத்தில் சுயராஜ்பக் கட்சியார் மோசமான வழியில் செல்லுகிறார்களென்று தெரியவில்லையா? நேட்டர்களே! எச்சரிக்கையாயிருங்கள். மஹாத்மா காந்தியடிகளும் இதை யறிந்துதான் ராஜீய விஷயத்திலிருந்து ஒதுங்கியிருக்கிறார்.

இன்றைக்கே ஸ்ரீ ஐயங்காரும் அவருடைய கோஷ்டிகளும் காங்கிரஸ் ஸ்தாபனங்களை விட்டு விலகட்டும்; மகாத்மா காந்தி தலைமையாக வரட்டும்; திரு. ஷண்முகமல்ல தமிழ்நாட்டு தைரியமுள்ள வீரரனைவரும் சட்டமறுப்புக்கு மார்தட்டி முன் வருவார்கள். அந்நியருக்கு தலைகுனிந்து மாலைசூட்டி மனமகிழும் ஆச்சாரியாரும் சைவதேசப்பெருமையை குறைகூறி சுயநலம்பெறும் ஐயங்காரும் சுதேசத்தில் அடிமைத்தனத்தையே வளர்த்துவரும் ஐயரும் சற்றே மறைந்திருந்தால் மற்றவர்கள் தைரியம் தானாகவே உதயமாகக்கூடும். மகாத்மாவும் மறுமுறையும் பிரசன்னமாவார். வேண்டுமானால் ஸ்ரீ ஐயங்கார் விலகியிருந்து பார்க்கட்டும். இவ்வேண்டுதலீண்டு விழித்து விரைவில் விலகுவார்களா?

### கொஞ்சமும் நெஞ்சிரக்கமில்லாத கொடுமை.

வட இந்தியாவில் பண்டித மதன் மோகன்மாளவியா சிறந்தவைதீகப் பிராமண குலத்தவர். சுதேசத் தலைவர்களிலும் முன்னேற்றமடைந்தவர். இந்து மகாசபைக்கும் ஏற்ற தலைவர். தீண்டாமையொழிப்பதிலும் சிறந்த சேவகர். இன்னும் பலவகையிலும் மகா சிறப்பு வாய்ந்தவரென்பது தேசப் பிரசித்தம். இத்தகைய பூசுரர் பெயர் மாசுறும் வண்ணம் அவர் குடும்பத்தார் அவர் வீட்டிலேயே கொஞ்சமும் நெஞ்சிரக்கமில்லாத கொடுமை செய்துவிட்டார்கள்.

அதாவது அவருடைய குடும்பத்தில் ஒருவர் மற்றொரு பிராமண வகுப்பில் கல்யாணம் செய்து கொண்டதற்காக மாளவியா வீட்டில் ஜாதிக்கூட்டம் கூடி கல்யாணம் செய்தவரை ஜாதிப் பிரஷ்டம் செய்துவிட்டார்களாம்.

மற்றுமிரு மாளவியாப் பிராமணர்கள் வேறு ஜாதியாருடன் சாப்பிட்ட தோஷத்திற்காக அவர்களையும் ஜாதிப் பிரஷ்டம் பண்ணிவிட்டார்களாம்.

அம்மட்டோ, சாகுந்தருவாயிலிருக்கும் தமது புதல்வியைப் பார்க்கப்போக வேண்டுமென்ற ஒரு தாயை, பிரஷ்டம் பண்ணப்பட்ட வீடானதால் போகக்கூடாதென்றும் தடுத்துவிட்டார்களாம்.

என்ன அநியாயம்! எப்படித் தீண்டாமை தீரும்? எவ்வாறு தேசம் க்ஷேமம் அடையும்? வட இந்திய மாளவியாவுக்கு தென் இந்திய தீட்சதர்

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

தேவலையென்றன்றோ தெரிகிறது. வகுப்புத் துவேஷத்தை வளர்த்து மனித வாழ்க்கையைக் கெடுதியாக்குமிவர்களை வங்காளக்கடலில் வாரி இறைத்திட்டாலும் குற்றமுண்டோ?

## நம்பிக்கைச் செட்டியார்.

சுயராஜ்யக் கட்சியின் மோசங்களையெல்லாம் வெளியிடுவோர்களுக்குப் பதிலெழுத வரிந்து கட்டிக்கொண்டு திரு. ஓ. கந்தசாமி செட்டியார் முன்வந்திருப்பதாகத் தெரிகிறது. "சுதேசமித்திரன்"னில் திரு. செட்டியாரவர்கள் பதிலெழுதாத நாளில்லையென்றே சொல்லலாம் போலிருக்கிறது. காரணமென்ன? சென்னைக் கார்ப்பொரேஷன் எலெக்ஷன் சமீபித்துவிட்டது. திரு. கந்தசாமி செட்டியார் பேரும் சுயராஜ்யக் கட்சி அபேக்ஷகர் சாப்தாவில் வெளியிடப்பட்டிருக்கிறது. திரு. செட்டியாரும் வெகு நம்பிக்கையுடனிருக்கிறார். பார்ப்பன சுயராஜ்ய வாதிகளை நம்பி மோசம் போனவர்களில திரு. செட்டியாரும் ஒருவரென்று உலகம் அறியும். ஆயினுமென்ன? "ஒரு கன்னத்திலடித்தால் மறு கன்னத்தையுந் திருப்பிக்காட்டு" என்னும் கிறிஸ்துவின் கட்டளையை நன்குணர்ந்தவரல்லவா? சென்ற வருஷம், சென்னைக் கார்ப்பொரேஷன் எலெக்ஷனில் திரு. செட்டியாரையும் ஒரு அபேக்ஷகராக சுயராஜ்யக் கட்சியார் நிறுத்தி தோல்வியுறச் செய்தனர். பார்ப்பன சுயராஜ்ய வாதிகளில் முக்கியஸ்தரும், இப்போது காங்கிரஸ் தலைவருமான திரு. எஸ். ஸ்ரீநிவாச அய்யங்காருக்கு செட்டியார் கார்ப்பொரேஷன் கௌன்சிலராயிருப்பதில் விருப்பமிருந்தால் சென்ற வருஷத்திலேயே பிராமண ஓட்டர்கள் மிகுதியாயுள்ள திருவல்லிக்கேணி வார்டில் அபேக்ஷகராக நிறுத்தி வெற்றிபெறச் செய்திருக்க மாட்டாரா? வேறு வார்டில் தோல்வியுறக் கூடிய திரு. சத்தியமூர்த்தியை திருவல்லிக்கேணியில் அபேக்ஷகராக நிறுத்தி வெற்றிபெறச் செய்த திரு. செட்டியாருக்கும், சுயராஜ்ய வாதிகளுக்கும் செல்வாக்கில்லாத இடத்தில திரு. செட்டியாரை நிறுத்தித் தோல்வியுறச் செய்தார் என்பதைச் சாதாரண புத்தியுள்ளவர்களும் அறிந்து கொள்ளக் கூடியதை திரு. செட்டியார் அறிந்து கொள்ளாத காரணமென்ன? திரு. ஸ்ரீநிவாசய்யங்காரிடத்திலுள்ள நம்பிக்கைதான். இதற்காகத்தான் நாம் திரு. கந்தசாமி செட்டியாரை நம்பிக்கைச் செட்டியாரென்று அழைக்கிறோம். இவ்வளவு நம்பிக்கையை ஜஸ்டிஸ் கட்சியில் தாமிருந்தபோது வைகக் கொண்டு அதைவிட்டுப் பிரியாமலிருந்திருந்தால் வெகு நாளைக்கு முன்னரே மகாத்மா காந்தியடிகளின் நிர்மாணத் திட்டத்தை ஜஸ்டிஸ் கட்சியார் கைக்கொள்ளும்படி செய்திருக்கலாமன்றோ? இவ்வருஷமும் சுயராஜ்யக் கட்சியின் அபேக்ஷகராயிருந்து தோல்வியடையாமல், நிர்மாணத் திட்டத்தை ஆசரித்திருக்கிற பிராமணரல்லாதாரியக்கத்தில் சேர்ந்து வெற்றி பெறும்படி எச்சரிக்கின்றோம். இன்றேல் சுயநலவாதிகளான பார்ப்பனர்கள் செல்வாக்கில்லாத செட்டியாரென்று பட்டங்கட்டிவிடுவார்களென்பது நிச்சயம். ஜஸ்டிஸ் கட்சியாரும் கவனிப்பார்களென்று நம்புகிறோம்.

## ஒற்றுமையும்,
## திரு. ஸ்ரீநிவாசய்யங்காரும்.

காங்கிரஸ் தலைவரான திரு. எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார் பம்பாயில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியில், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு வழி காட்டிவிட்டதாகத் தம்பட்டமடித்துக் கொள்ளுகிறார். அவரது துணைவர்களும் ஒத்தூக்கு மத்தளமடிக்கிறார்கள். இது தண்ணீர்ப் பானை செய்யத் தெரியாத குயவன் தாளி செய்வதற்கு அஸ்திவாரம் போட்டது போலிருக்கிறது. தான் வசிக்கும் சென்னை மாகாணத்தில் பிராமணருக்கும், பிராமணரல்லாதாருக்கும் நாளுக்கு நாள் விருத்தியாகிவரும் பிணக்கை ஒழிக்க வகைதேட முடியாத இவர், அகில இந்தியாவிலுமுள்ள ஹிந்துக்களுக்கும், முகம்மதியர்களுக்குமுள்ள பிணக்கை ஒழிக்க வகை தேடுதலில் முயன்றது வேடிக்கையல்லவா? திரு. அய்யங்காரை ஒன்று வினவுகிறோம். ஹிந்து சமூகத்தில் திரு. அய்யங்காருக்குள்ள செல்வாக்கென்ன? இவருடைய கொள்கையை எத்தனை ஹிந்துக்கள் இதுவரையும் ஆசரித்துள்ளார்கள்? சென்னை ராஜதானியிலுள்ள பிராமணர்களிடத்திலாவது இவருக்குச் செல்வாக்குண்டா? உண்டெனின், பிராமணரல்லாதார் விரும்பும் உரிமைகளுக்காக பிராமணர்களுக்கு இதுவரையிலும் ஏதாவது ஆலோசனை கூறியிருக்கிறாரா? பிராமணரல்லாத ஹிந்துக்கள் விரும்பும் ஆலயசமத்துவம் முதலிய உரிமைகளைப்பற்றி திரு. ஐயங்காரின் அபிப்பிராயமென்ன? தஞ்சை ஜில்லாவில் கூடிய "பிராமண சம்மேளனம்" என்ற பிராமண ஜாதியார் கூட்டத்தில் ஆஜராகி பிராமணரல்லாதாரிடத்தில் பிராமணர்கள் இன்னவிதம் நடந்துகொள்ள வேண்டுமென்று தம்முடைய அபிப்பிராயத்தை வெளியிட்டு பிராமணரல்லாதார்களுக்குள் உண்டாகிவரும் மனக் கசப்பை மாற்ற ஏன் முயன்றிருக்கக்கூடாது? அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியிலாவது இது விஷயமாக ஒரு தீர்மானங் கொண்டுவந்து நிறைவேற்றியிருக்கக் கூடாதா? இவ்வளவு கூடச் செய்ய முடியாத இவர்தானா ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்கு வழி கோலிவிடுவாரென்று காங்கிரஸ் வாதிகளைக் கேட்கிறோம். உண்மையில் பிராமணர்களின் முன்னேற்றத்தில் திரு. ஸ்ரீநிவாசய்யங்காருக்கு விருப்பமேயொழிய, தேச ஒற்றுமை யென்பது வெறும் வெளிவேசமென்பதே நிச்சயம். இவர் பேச்சைக் கேட்டு ஏமாறுங் காலம் மலையேறிவிட்டது.

## கிராமப்பிரசாரம்.

சென்னையில் காங்கிரஸ் மஹாசபையை நடத்துவதற்கு பக்கபலங் கட்டுவதற்காக சென்னை சுயராஜ்ஜியக்கட்சி பார்ப்பனர்களாகிய திரு. எம். கே. ஆச்சாரியார், திரு. சத்தியமூர்த்தி அய்யர், திரு. எஸ். ஸ்ரீநிவாசய்யங்கார், சுதேசமித்திரன் பத்திராதிபர் ஏ. ரெங்கசாமி அய்யங்கார் முதலியவர்கள் இப்பொழுதே பிரசாரஞ் செய்ய வெளியேறிவிட்டார்கள். குருகுலப்போராட்ட விவாத காலத்தில் ஒரு பிராமணச்சிறுவனுடன் ஒரு பிராமணரல்லாதசிறுவன் கூடவிருந்து சாப்பிட்டால் ஒரு வாரம் தாம் பட்டினி கிடப்பதாகக் கூறிய திரு. எம். கே. ஆச்சாரியார் இவ்வளவு காலமும் அவ்வார்த்தையை ஆக்ஷேபியாமலிருந்து விட்டு மதுரையில் காங்கிரஸ் சார்பாய் நடந்த கூட்டமொன்றில், ஒருவர் கேள்விகேட்க தாம் அவ்வார்த்தையைச் சொல்லியதில்லை யென்று கூறினதாகப் பத்திரிகையில் வெளியிடப்பட்டிருக்கிறது. உண்மையாகவே சொல்லியதில்லை யானால் ஏன் இதுவரை வெளியிடவில்லை என்று கேட்கிறோம். ஒரு வேளை கோகலே மண்டபக்கூட்டத்தில் திரு. சத்தியமூர்த்தி ஜஸ்டிஸ் கட்சியார் மாயவரத்துக் கூட்டத்தில் மந்திரிபதவியை இப்போது ஒப்புக்கொள்வதில்லை யென்று தீர்மானித்திருந்தாலும் மந்திரிகள் சம்பளத்தீர்மான காலத்தில் பணகால் ராஜா மந்திரி உத்தியோகத்துக்கு அந்தரங்கமாக அலைந்து திரிந்தார் என்று சொல்லிவிட்டு ஜஸ்டிஸ் திராவிடன் பத்திரிகைகள், திருமூர்த்தியை "பொய்யர்" என்று பட்டஞ்சூட்டிவாதுக்கழைத்தவுடன் ஜஸ்டிஸ் கட்சியாரிடத்திலோ மன்னிப்புக் கேட்பதென்று ஜாதிக்கர்வங்கொண்டு, கவர்னரின் அந்தரங்கக்காரியதரிசியிடத்தில் மன்னிப்புக்கேட்டுக் கொண்டது போலிருக்குமோவென்று சந்தேகிக்கிறோம். கிராமவாசிகள் சுயராஜ்ஜியக்கட்சியாரை நம்பி மோசம் போகாதிருக்குமாறு வேண்டுகிறோம். நம்பிக்கெட்டது போதும். மகாத்மாவின் நிர்மாணத்திட்டமே தேசத்தின் ஆன்மா வென்று கூறுகிறோம்.

## லாட்டரி அறிக்கை.

நாடார்குல மித்திரன் க்ஷேமநிதி லாட்டரிச்சீட்டு பிரைஸ் ஜாபிதாவின் அச்சுவேலை மொத்தம் பிரைஸ் 2000-க்கு இவ்வாரத்தில் 1750 வரை அச்சாகி முடிந்திருக்கிறது. அடுத்தவாரக் கடைசியில் அவசியம் சீட்டு விற்ற கனவான்களுக்கும் ஸ்டாம்பு அனுப்பிய கனவான்களுக்கும் கிடைக்கும்படியாகப் பிரைஸ் ஜாபிதாவை அனுப்பி வைக்கக்கூடும்.

## நாடார் மஹாஜன சங்கம், மதுரை.

### நோட்டீஸ்.

ஐயா,

நமது சங்கம் கௌன்஬ில் மீட்டிங்கு 1927-ஹு ஜூன் மீ 25 உ (பிரபவ-ஹு ஆனி மீ 11 உ) சனிக்கிழமை மாலை 4-மணி முதல் சங்கம் ஆபீஸில் நடைபெறும்.

மீட்டிங்குக்குத் தாங்கள் விஜயஞ் செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். ஆலோசிக்கப்படும் விஷயங்களாவன:-

1. 1927—28-ஹுத்திற்கு ஏழை மாணவர் ஸ்காலர்ஷிப் விஷயமாய்க் கவனித்தல்.

2. 1927—28-ஹுத் திற்குரிய ஸ்கூல் கிராண்டு விண்ணப்ப விஷயமாய்க் கவனித்தல்.

3. சங்கத்தின் நிர்வாகம் தீவிரமாய் நடைபெறுவதைப்பற்றி ஆலோசித்தல்.

4. காரியதரிசிகளால் கொண்டுவரப்படும் இதர விஷயங்களைக்கவனித்தல்.

தவிர சங்கத்தின் உபவிதிகளை அனுசரித்து அங்கத்தினர்கள் கொண்டு வரும் தீர்மானங்களும் கவனிக்கப்படும்.

மேற்கண்ட விஷயங்கள் ஆலோசிக்கப்பட்ட பின்னர், அங்கத்தினர்களுடைய கேள்விகளுக்கு விடையளிக்கப்படும்.

பா. ம. பாண்டிய நாடார்,
ஆ. அ. ஆறுமுக நாடார்,
காரியதரிசிகள்.

## பம்பாயில் விருந்து.

பம்பாயிற் பல்லாண்டுகளாய்ஸ்ரீமான் வெ. நா. மூ. அவர்களின் சந்ததியார் திசையெங்கும் தெரிய வர்த்தகம் விரித்து நிகழ்த்தும் விஷயம் பலருக்கும் புலனுயதொன்றே. அவ்வழித்தோன்றல் ஸ்ரீமான் வெ. நா. மூ. நாகலிங்க நாடார் அவர்களின் சிரேஷ்ட குமாரர் ஸ்ரீமான் சிவசுவாமி நாடார் அவர்களுக்கு விருதுமாநகரில் பிரபவ ஹு வைகாசி மீ 27 உ சுபதினத்தில் திருமன்றல் இனிதே நிறைவேறியது. அதன் பொருட்டாய் அவர்கள் தங்கள் பம்பாய்க்கடை காரியஸ்தருக்கு பிறப்பித்துள்ள ஆக்ஞைக்கேற்ப, பம்பாயில் 12-6-1927-ல் பெரியதோர் விருந்து நடாத்தப்பெற்றது. பம்பாயிலுள்ள நாடார் குல வர்த்தகர்கள் எல்லோரும் ஷ காரியத்தில் ஒத்துழைப்பிற்கு பெரிதும் ஆர்வமோடு ஈடுபட்டார்கள். அவ்விருந்து நிகழ்த்தப்பெற்ற இடம், பம்பாய் மாநகரின் வதனமென பல்வகை பொலிவுடை "வால்க்கேஸ்வர்மலை" எனும்மாளிகை நிறைந்த பூங்குன்றில் "பாடப் பிப்பிலீஸ்வர்" எனும் திருநாமத்தோடு விளங்கும் மகாதேவின் ஆலயமும், அதன் பாங்கிற் செழிப்புடை சிங்காரத் தோட்டமுமாகும். பம்பாய்நகர் வாசிகளில் மிகவும் கண்ணியமான அந்தணர், லோவாணு, பாட்டியா, பனியா, வாணியா முதலிய பல் வகுப்பினரும், நாடார்களும், சிரகபஜார், சவதார்னிய பஜார் இத்தியாதி பஜார்களிலுள்ள கீர்த்திபெற்ற வர்த்தகர்களும், அவ்வவ் வர்த்தகத்தரகர்களும், கப்பலிற் சரக்கேற்றும் தொழிலாளரும், இன்னபோன்ற பலரும் நூற்றுக் கணக்காய் விஜயம் செய்திருந்தனர். குஜராத்திமுறைப்படி அறுசுவை பொருந்தப் பல்திறத்த ருசிகரமான பதார்த்தங்கள் தயாரிக்கப்பெற்றிருந்தன. சாக்ஷாத் மஹாதேவருக்கு பூஜையானபின்னர் [illegible]ல்லோருக்கும் போஜனம் வழங்கலானது. அவ்வமயம் சிலர்வடமொழி[illegible]சுலோகம் பண்ணுடன் [illegible]

ஆகாரம் அருந்திய பின்னர் தாம்பூலம் வழங்கலாயிற்று. எல்லோரும் அன்பின் பெருக்கால் உரிமைபாராட்டித் தம்பதிகளுக்காசி கூறுவாராயினர். ஸ்ரீமான் வெ. நா. மூ. நா. சிவசுவாமி நாடார் அவர்களின் உயரிய நோக்கலாகிய இவ்விருந்து பம்பாய் வாசிகளுக்கும் பம்பாயிலுள்ள நாடார்குலத்தவர்களுக்கு மிடையே அன்பின் பிணிப்பை அதிகப்படுத்திற்று.

பே. ரா. பிரியசுவாமி.

## 6-வது வருடப் பூர்த்திவிழா.

### அருப்புக்கோட்டை ஸ்ரீமான் முதலாளி மூ. மூ. முத்துச்சாமிநாடார் அவர்கள் ஞாபகச்சின்னவாசகசாலை

நாளது ஹு ஆனி மீ 1 உ (15-6-27)ல் இவ்வாசகசாலையின் 6-வதுவருடப்பூர்த்திவிழா நடத்துவதென்றுஏற்பாடாகி யிருந்து அதன்படி அன்றைய தினத்தில் வீதிகள் வாழை, தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தன. வெளியூர்களிலிருந்தும் சில பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள். காரைக்குடி தமிழ் இலக்கிய சங்கம் லிமிட்டெட், அமைச்சர் திருவாளர் பி. ஸ்ரீநிவாசாச்சாரியார் அவர்களும் ஷ ஊர், ஸ்ரீ அருணசலஞ் செட்டியார் அவர்களும், மதுரை ஸ்ரீ யன். எஸ். ராமசாமி அய்யர் அவர்களும் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது. மற்றும் உள்ளூர் பிரமுகர் பலர் விஜயம் செய்து சிறப்பித்தனர்.

### அக்கிராசனர் ஊர்வலம்.

இவ்வூர் அமெரிக்கன் மிஷின் பாதிரியார், ரெவெரெண்டு இ. இ. ஒயிட் துரையவர்களை இரவு 8-மணிக்கு ஊர்வலமாக நாடார்கள் எலிமெண்டரி ஸ்கூல் ஹாலுக்கு அழைத்து வந்ததும் கூட்டம் ஆரம்பமாயிற்று.

### நடவடிக்கை விபரம்.

ஆரம்பத்தில் நண்பர் அ. அண்ணாமலை அவர்களால் கடவுள் வணக்கம் பாடப்பெற்றதும், வாசகசாலையின் பிரஸிடெண்டு ஸ்ரீமான் சொ. ஆ. சொக்கலிங்க பாண்டியரவர்கள் வரவேற்புப் பிரசங்கம் செய்தார்கள்.

பின்னர் திருவாளர் ஆ. இ. அண்ணாமலைநாடார் அவர்கள் கனம் ஒயிட் துரையவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி பிரேரித்தார். அதை திருவாளர் அ. கு. அண்ணாமலை நாடார் அவர்கள் ஆமோதிக்கவும் கனம் ஒயிட் துரை அவர்கள் அக்கிராசனம்வகித்து முன்னுரையாகத் தமிழில் ஒரு அரிய சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். அக்கிராசனர் அமெரிக்கா தேசத்திலே பிறந்து வளர்ந்து ஆங்கிலத்தையே தாய்பாஷையாகக் கொண்டிருந்தாலும் தமிழில் சிறிதும் தவறுதலின்றி இனிமையாகப்பேசினது சபையோரின் முழுக்கவனத்தையும் கவர்ந்துவிட்டது.

பின்னர் ஸ்ரீமான் எ. ஹு. திலாதர் அவர்கள் காரியதரிசி ரிப்போர்ட் வாசித்ததும், திருவாளர் பி. ஸ்ரீநிவாச ஆச்சாரியார் அவர்கள் "குகன்கொள்கை" என்பது பற்றியும், நாடார் ஹைஸ்கூல் தலைமை தமிழ் பண்டிதர் ஸ்ரீமான் துரைச்சாமிநாடார் அவர்கள் "தருமர்கன்னெறி" என்பது பற்றியும், ஸ்ரீமான் கருப்பையாபிள்ளை அவர்கள் வாசகசாலையின் பயன் என்பது பற்றியும் பேசினார்கள். அக்கிராசனர் முடிவுரையில் கல்வியைப் பற்றி விஸ்தரித்துப் பேசினார். முடிவில் ஸ்ரீமான் இரத்தினவேல் நாடார் அவர்கள் வந்தனோபசாரம் சொல்லி அக்கிராசனருக்கும் உபந்நியாசகர்களுக்கும் முக்கியஸ்தர்களுக்கும்புஷ்பஹாரம் சூட்டியதும் கூட்டம் இனிது கலைந்தது என்று காரியதரிசி அறிவிக்கிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## இலங்கைக் கடிதம்.

(மனோகரன் எழுதுகிறார்)

சின்னாட்களாகப் பெய்த மழையால் பல பக்கங்களில் நீர்ப்பெருக்கேற்பட்டு பொது ஜனங்கள் மிகக் கஷ்டப்படுகின்றனர். கொழும்பு நகரத்தையும் போக்குவரத்து சாதனங்கள் நடைபெற முடியாத முறையில் பாதித்திருக்கிறது. வட ஜில்லாவில் பள்ளத்தாக்கான சுமார் 18 கிராமங்களும், சுமார் 15000 ஜனங்களும் மிகப்பீடிக்கப்பட்டிருக்கின்றனர். தற்போது வருண பகவானின் உக்கிரம் சற்று தணிவடைந்திருப்பினும் ஆறுகளில் பிரவாகம் இன்னும் சரிவர நீங்கியபாடில. எனினும் தற்சமயம் சற்று போக்குவரத்துச் சாதனங்கள் சீர்பட்டுவருகின்றன.

## ஸ்ரீமத் சுவாமி ஸகஜாநந்தம்.

இதுபோழ்து இலங்கையில் விஜயஞ் செய்திருக்கும் ஸ்ரீமத் சுவாமியவர்களை மிக கௌரவமுடன் மகாஜனங்கள் உபசரித்து வருகின்றனர். இவர்கள் தலைமையின் கீழ் இலங்கை இந்திய வாலிப சங்கச் சார்பிலும், ஆதிதிராவிட மகாஜனங்கள் சார்பிலும் பல பொதுக் கூட்டங்கள் நடைபெற்றன. இவர்கள் சிதம்பரத்தில் ஸ்ரீ நந்தனார் மடமொன்றும், கல்லூரி யொன்றும் தமது முயற்சியால் ஸ்தாபித்திருக்கிறார்கள். இதன் கட்டட விஷயமாக இங்குள்ள மகாஜனங்களின் ஆதரவை எதிர்பார்க்கிறார்கள். தனவைசிய மகாஜனங்கள் போதிய ஆதரவளிப்பார்களென நம்பப்படுகிறது. இதன் பொருட்டு இன்னுஞ் சில நாட்கள்வரை இங்கு தாமதித்தல் கூடும்.

## தெ. இ. ஆ. திராவிட வைதீக சமாஜம்.

இதன் பொதுக் கூட்டமொன்று கடந்த 10-6-27-ல் கொள்பிட்டி கார்யல் லாட்ஜில் ஸ்ரீமத் சுவாமியவர்கள் தலைமையின் கீழ் நடைபெற்றது. அது சமயம் ஸ்ரீ கே. பி. சிவன் அவர்களால் அக்கிராசனருக்குப் புட்பஹாரமணியப்பட்டு காரியதரிசியவர்களால் நிர்வாகக் கூட்டத்தின் நிகழ்ச்சிமுறை வாசிக்கப்பெற்று அக்கிராசனரவர்களால் "தெய்வ வழிபாடு" என்பது பற்றி சொற்பெருக்கும் நிகழ்ந்தது. காலைச்சேரி சங்க நிர்வாகிகளால் ஸ்ரீமத் சுவாமிகளுக்கு இரயில் கூஜாவொன்று காணிக்கையாக வழங்கப்பட்டு கூட்டமினிது சாந்தமெய்தியது.

## விசாக வைபவம்.

13—6—27 விசாக நக்ஷத்திரத்தன்று காலை 10-மணிக்கு ஸ்ரீமான் ப. சு. சின்னையா பிள்ளையவர்கள் தனது கிரகத்தில் குருபூஜை அன்னதான கைங்கரியங்கள் நிறைவேற்றி பசுவுங் கன்றுமுடன் தனது புத்திரர்கள் திருக்காவடி யெடுத்தும், பாற் குடமெடுத்தும் ஊர்வலத்துடன் ஷை வைதீக சமாஜத்தின் ஆலயத்தில எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ செல்வவிநாயகர், ஸ்ரீ சுப்பிரமணியர் சன்னிதானத்தில் அர்ப்பணம் செய்தார். குறிப்பிட்ட சின்னையா பிள்ளையவர்கள் முன்னொரு சமயம் திருச்செந்தூர் ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயத்திற்கு காவடியுடனும் வெள்ளி வேல், தங்க வேல்களுடனும் மிகபக்தியுடன் சமர்பிக்கச் சென்று சாதி வித்தியாச காரணத்தால் தமது அர்ச்சனையை நிறைவேற்ற முடியாராகி வேல்களையும் முறிக்கக்கொடுத்து மன வெறுப்புடன் திரும்பியவர். 1912 ல் ஸ்ரீமத் சுவாமி அத்வைதானந்தா அவர்களால் போதம் பெற்றவராம்.

## காவல்கிணறு கத்தோலிக் நாடார் ஐக்கிய சங்கம்.

ஷை சங்கத்தின் மூன்றாவது ஆண்டு நிறைவுவிழா வைபவம் கடந்த 12-6-27-ல் யூனியன் பிளேஸ் 61-ம் நீர் கட்டடத்தில் கூடியது. ஆரம்பத்திலும், இறுதியிலும் பாலியர்களால் மிக இனிமையான பஜனை நடந்தது. ஸ்ரீமான் கோ. ம. அமிர்த நாடாரவர்களால் நிர்வாகிகளுக்குப்புட்பஹாரங்களணியப்பட்டு ஸ்ரீமான் மரிய செபஸ்திபா நாடாரவர்களால் தெய்வ வழிபாடு பாடப்பெற்று காரியதரிசியவர்களால் வரவேற்பும், ஸ்ரீமான் எம். எஸ் சூசை நாடாரால் "கல்வி" யென்பது பற்றி உபந்நியாசமும், ஸ்ரீமான் எம். அந்தோனிமுத்து நாடாரவர்களால் வந்தனோபசாரமும் கூறப்பெற்று இராஜ வாழ்த்துடன் சந்தனம், தாம்பூலம் வழங்கிக் கூட்டமினிது சாந்தமெய்தியது. நிகழும் 10—7—27-ல் புது வருட எலெக்ஷன் நடைபெறுமெனத் தெரிகிறது.

## அரியவுரைகள்.

செல்வாக்குள்ளவர்களாகக் கருதப்படுவோரின் பெயரைச் சொல்லிக்கொண்டு ஒரு காரியத்தில் புகாமல் தாங்களாகவே தங்கள் திட்டத்தை நிறைவேற்ற சக்தி படைத்தவர்களாக முன்வரவேண்டும்.

—மகாத்மா காந்தி.

பரிகரிக்கமுடியாத ஒரு விஷயத்தைப் பொறுத்துக் கொண்டிருக்க தேச ஊழியர்களுக்குத் தெரிய வேண்டும்.

—ஷையார்.

உலகத்திற்கே பெரிய போதகரான மகாத்மா காந்தியை ஆண்டவன் இந்தியாவுக்கு அருளியிருக்கிறார். மகாத்மாஜீ இந்தியாவில் உள்ள தீங்குகளைப் போக்குவதற்கு வேலை செய்துவருவது மாத்திரமன்றி இந்தியாவில் உள்ள பல வகுப்பினரையும் ஒன்றுபடுத்தி வருகிறார்.

—ஸ்ரீமான் ரங்காச்சாரி.

என்னுடைய சுயமரியாதையையும் உரிமையையும் ஒப்புக்கொள்ளாத ஒரு ஸ்தாபனம் அது காங்கிரஸா யிருந்தாலும் சரி தேசாபிமானமாயிருந்தாலும் சரி மோக்ஷ லோகமாயிருந்தாலும் சரி அதில் இருக்கநேரும் ஒவ்வொரு விநாடியையும் நரகத்திலிருப்பதாகவே எண்ணுவேன்.

—ஸ்ரீமான் ஈ. வி. ராமசாமிநாயக்கர்

உனது கணவர் தனது தாயை எவ்வளவு அடிக்கடி பார்க்கமுடியுமோ அவ்வளவு அடிக்கடிபார்க்க உன்னாலான உற்சாக மூட்டி நீயும் உடன் செல். தனிபாகவும் கண்டுகொள்ள தூண்டுதல் செய்.

—டோராதிடிக்ஸ்,

உனது கணவர் தன்தாயிடம் கொள்ளும் அன்பிற்காக அவரிடம் மூடத்தனமாய்க் கோபம் கொள்ளாதே. இதனால் உன்னிடம் கொண்டிருக்கும் உனது கணவர் அன்பு குறையாது.

—ஷையார்

## இலங்கை நாஷனல் காங்கிரஸ் கூட்டம்.

சென்ற மீ 25உ காங்கிரஸ் ஹாலில் நடைபெற்ற கூட்டத்தில் ஸ்ரீமான் சி. பொன்னம்பலம் அவர்களால் இலங்கை சர்வ கலாசாலை ஸ்தாபக விஷயமாய் அக்பர் கமிட்டி செய்த யாதாஸ்தை சட்டசபை அங்கத்தினர்கள் ஏற்றல் கூடாதென்றும் இப்பொழுது ஆலோசித்திருப்பதுபோல் கொழும்பிலோ அன்றி சுருக்கருகிலோ பொது ரெவினியூ அப்வேஜைக் கொண்டு ஷை சர்வ கலாசாலை ஸ்தாபிப்பதே உசிதமென்றும், அப்படிச் செய்வது பொது ஜனங்களுக்கு நன்மை பயத்தல் கூடுமென அச்சப் கமிட்டியார் அபிப்பிராயப்படுகின்றனரெனவும் தீர்மானமானது.

## வேர்க் கடலை.

நமது நாட்டில் ஏராளமாக உற்பத்தியாகும் வேர்க் கடலையின் பலவிதப் பிரயோஜனங்களைப்பற்றி ஸ்ரீ ருகம ஹர்ஸ்ட் என்பவர் பின் வருமாறு எழுதுகிறார்.

தாவர வர்க்கங்களிலிருந்து கிடைக்கும் லாபத்தைப்போல் வேறொன்றிலிருந்தும்கிடைக்கிறதில்லை. சாதாரண தாவரப் பொருள்களை, விலைமதிக்கக்கூடாத தங்கமாக்குவது ரஸாயன சாஸ்திரிகளின் கைகளிலேயே இருக்கிறது.

வேர்க்கடலை என்று சொல்லப்படும் பொருளை, அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் ஆராய்ச்சி செய்ததிலிருந்து அதைத் தேங்காயின் உபயோகத்திற்குச் சமமாக வைத்திருக்கிறார்கள்.

அமெரிக்காவில் விவசாய சாஸ்திரத்தில் கற்றுத் தேர்ந்த ஸ்ரீ ஜார்ஜ் கார்வே என்பவர் வேர்க்கடலையின் உபயோகங்களைப்பற்றிப் பலவித ஆராய்ச்சி செய்திருக்கிறார்.

அது மிகவும் உயர்ந்த ஆகாரமென்றும், நூற்றுக்கு மேல்பட்ட வழிகளில் மனிதருக்குப் புயன்படக் கூடியதென்றும் சொல்லுகிறார். ஒரு ராத்தல் மாட்டிறைச்சிக்கு எவ்வளவு சத்துண்டோ அதற்கு இரண்டு மடங்கு சத்து ஒரு ராத்தல் வேர்க்கடலைக்கு உண்டு என்று அவர் சொல்லுகிறார்.

ஒரு ஸ்திரீ தனது பருத்திப் பயிர்களில் மொட்டுகள் உதிர்ந்து போகின்றன வென்று புரோபஸர் கார்வரிடம் வந்து சொன்னாள். அதிலிருந்து தான் இவர் வேர்க்கடலையைப் பயிரிடுவதைப்பற்றி யோசிக்க ஆரம்பித்தார். வேர்க்கடலையில் நல்ல லாபம் கிடைக்குமென்று நினைத்து உடனே ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்தார். பிரான்ஸ் தேசத்தில் திராக்ஷை ஏராளமாகப் பயிராவதற்கு பாஸ்டர் என்பவர் எப்படிக்காரணமோ, அதுபோல அமெரிக்காவில் வேர்க்கடலை உற்பத்தியாவதற்குப் புரோபஸர் கார்வர் என்பவர் தான் காரணம்.

இவரது ஆராய்ச்சியின் பலனாக உலகத்திற்கு வேர்க்கடலையின் உபயோகம் நன்கு தெரியவந்தது. இதனால் அமெரிக்காவில் ஒன்றுக்கும் உதவாமல் கிடந்த ஏராளமான நிலங்கள் இப்பொழுது வேர்க்கடலை பயிரிடப்பட் நல்ல லாபம் கிடைக்கிறது. தவிர வேர்க்கடலை பயிரிவதினால் அச்செடிகள் ஆகாயத்திலுள்ள "நைட்ராஜன்" என்ற சத்தை ஆகாயத்திலிருந்து இழுத்து பூமிக்குச் சேர்க்கிறபடி[illegible] சத்தில்லாத நிலங்கள் சத்துள்[illegible] மற்றப் பயிர்களும் உற்பத்தியாக[illegible] இடமேற்பட்டுவிடுகிறது.

ஒரு டம்[illegible] வேர்க்கடலையிலிருந்து பசுவின் பா[illegible]கு நிகரான சத்துள்ள ஒரு பவுண்ட் [illegible]யர்ந்த பால் உற்பத்தி செய்யலாம். [illegible]தைக் காப்பி, தேயிலை முதலியவை[illegible]க்கு உபயோகிக்கலாம். வேர்க்கடலையிலிருந்து ஐந்து வித காலை ஆகாரங்களும், இரண்டு வித மாவுகளும், ரொட்டிகளும் கால்நடைகளுக்கு வேண்டிய நான்கு வித ஆகாரங்களும் தயார் செய்யலாமென்று புரோபஸர் கார்வர் சொல்லுகிறார். மருந்து வகைகளுக்கு அதை எவ்வளவு தூரம் உபயோகிக்கலாமென்று ஆராய்ச்சி செய்து வருகிறார். வேர்க்கடலைப் பருப்பின் மேல் மூடியுள்ள மெல்லிய சிகப்புத் தோலிலிருந்து கொயினா தயார் செய்யலாம். பசுவின் பாலில் உள்ள கொழுப்பைவிடப் பன்னிரண்டு மடங்கு அதிகமும், அதிலுள்ள தண்ணீர் சத்தில் ஒரு பாகமும் வேர்க்கடலையின் பாலில் இருக்கிறபடியால் சாதாரணமாகப் பாலுக்குப் பதிலாக இதை உபயோகிக்கலாம். இதிலிருந்து தயிர் முதலியவைகளையும் தயார் செய்யலாம். வியாதியஸ்தர்களுக்கு இந்தப் பால் மிகுந்த உபயோகமாயிருக்கும். ஒன்பது வித மரச் சாயங்களும், பத்தொன்பது விதத் தோல் சாயங்களும், மெட்டால் பாலிஷ், கொழுப்பு, சோப்புகள், இறவை, கிளிசரைன், கொயினா முதலியவைகளையும் வேர்க்கடலையிலிருந்து செய்யலாம். மொத்தத்தில் மனித சமுகத்திற்கு வேர்க்கடலை அளவு கடந்த பிரயோஜனத்தைக் கொடுக்கிறதென்று புரோபஸர் கார்வர் சொல்லுகிறார். 15 வருடங்களுக்கு முன் வேர்க்கடலை பயிர் செய்வதால் நல்லவரும்படி கிடைக்குமென்று நினைக்கப்பட்டது. இன்று ஒரு வருடத்தில் 230 லக்ஷம் புஷல் விளைகிறது. வருடமொன்றிற்கு வேர்க்கடலையிலிருந்து வெண்ணை மட்டும் 70 லக்ஷம் ராத்தலும், எண்ணெய் 40 லக்ஷம் காலனும் எடுக்கப்படுகிறது. சென்ற வருடத்தில் அமெரிக்கா ஐக்கிய நாட்டில் சராசரி ஒவ்வொரு நபரும் அரைபுஷல் வேர்க்கடலையைப் பல விதங்களில் உபயோகித்து வருவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

அமெரிக்கா ஐக்கிய நாட்டைவிட வேர்க்கடலையை உபயோகிப்பதில் எத்தனையோ விதங்களில் இந்தியா பின் நிற்கிறது. இந்தியாவில் வேர்க்கடலை உற்பத்தியாவது கொஞ்சமல்ல. ஆனால் அதைச் சரியான வழிகளில் உபயோகிக்க புத்திசாலித்தனமும் யந்திரங்களும் பணமுமே தேவை. இங்கே வேர்க்கடலையிலிருந்து பால் எடுக்கிறதாயிருந்தால் லக்ஷக்கணக்கான குழந்தைகள் சுத்தமான பால் கிடைக்காமல் கஷ்டப்படுவது நின்று விடும். மண்ணில் போட்டு வறுத்துச் சாப்பிடுவதே இந்தியாவில் வழக்கமாயிருக்கிறது. அதைப்பக்குவஞ்செய்யாமல் அப்படியே சாப்பிடுவதினால் சாப்பிடுகிறவர்களுக்கு உடம்புக்குப் பிடிக்கிறதில்லை.

அமெரிக்காவில் செய்கிறமாதிரி இங்கேயும் ஏன் செய்யக்கூடாது? அம்மாதிரியான நிலைமை இந்தியாவில் ஏற்பட வெகு காலஞ் செல்லும். ஏற்றுமதி செய்வதை நிறுத்திப் பல விதங்களில் அவைகளை உபயோகப்படுத்த இந்தியர்கள் முன்வருவது கஷ்டம். ரஸாயன சாஸ்திரிகள், முயற்சி செய்கிறவர்கள், பணமுள்ளவர்கள், யந்திரசாலைக்காரர் ஒவ்வொருவரும் தங்களது சொந்த நன்மையை மட்டும் கவனித்துக்கொண்டிருக்கிறபடியால் இந்தியா நாளுக்கு நாள் ஏழையாகிக் கொண்டுவருகிறது. இந்தியாவில் கோடிக்கணக்கான பேர்கள் வயிற்றுக்கில்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது அதனுடைய மூலப்பொருள்களை அந்நிய நாட்டார் ஏராளமாகக் கொள்ளையடிக்கிறார்கள். சட்டத்தையும் அமைதியையும் காப்பதற்காகத் தங்களிடம் ஒப்புவிக்கப் பட்டிருக்கிறதென்று சொல்லுகிறவர்கள், இந்தியாவின் கைத் தொழில் பிரவர்த்தியிலும், இந்தியர்களின் கல்வியிலும், குடிசைத் தொழில்களிலும், அவர்களது கவனத்தைச் செலுத்தி செலவிட்டிருந்தால் இந்தியா இப்பொழுதிருக்கிற மாதிரி அவ்வளவு கேவலமான நிலைமையில் இராது.


## இராவில் மணிபார்க்கும் ரேடியம்ரிஸ்லெட்கெடியாரம்



இந்தக் கெடியாரத்தில் இராவில் எவ்வளவு இருட்டாயிருந்தாலும்விளக்கு வெளிச்சமில்லாமல் மணி நன்றாய்த் தெரியும். கையில்கட்டும் தோல்பட்டையுடன் விலை ரூ 6-8-0

விலாசம்:- சகக தண்டு கம்பெனி,

பார்க்டவுன்போஸ்ட், மதராஸ்.

## இனிய இன்ப நூல்கள்.

| | |
|---|---|
| சரீரமர்மசாஸ்திரம்(படமுள்பட) | 1-0-0 |
| இல்லற இன்ப ரகசியம் | 0-8-0 |
| மணவாழ்க்கை மர்மம் | 2-4-0 |
| சதிபதிகளின் மர்மம் | 1-0-0 |
| ஸ்திரீ புருஷ ரகசியம் | 1-0-0 |
| இரதிமதன சிருங்காரம் | 0-12-0 |
| மனோஹிய சாஸ்திரம் | 1-8-0 |
| ஜீவ வசிய பரம ரகசியம் | 3-0-0 |
| மஹேந்திர ஜாலம் | 0-12-0 |
| மதிமோசக் களஞ்சியம் 2-பாகம் | 2-0-0 |
| கைத்தொழில் வணிக இரகசியம் | 1-8-0 |
| கலியின் கோலாகலம் | 0-12-0 |
| சிதாலக்ஷ்மி | 1-0-0 |
| மாயா ஜாலம் | 1-0-0 |

கேட்லாக் இனம்!

நேஷனல் பப்ளிஷிங் கம்பெனி,

வெங்கட்டராமய்யர் வீதி.

மதராஸ்.


Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# அஷ்டமாசித்தி:

## ஆஸ்திரேலியாக் காரர் அனுபவம் பெற்றார்.

எவ்விதக் கடின காவலில் வைத்திருந்த போதிலும் தப்பி வெளியே போய்விடக்கூடிய சாமர்த்தியம்வாய்ந்த ஆஸ்திரேலியாக்காரர் சமீபத்தில் லண்டனுக்குச் சென்றிருந்தார். அவருக்கு ஸ்ரீ மர்ரே என்று பெயர். "விலங்கு அரசர்" என்று எல்லோரும் அழைக்கின்றனர். அங்கே பல கடுமையான பரீட்சைகளெல்லாம் செய்து பார்த்தார்கள். எனினும் அவர் அவைகளிலிருந்து சுலபமாகத் தப்பித்துக்கொண்டார். அவர் இரண்டு வருஷங்களுக்கு முன் பம்பாய்க்கு வந்திருந்தார். அங்கே பல அரிய வேலைகளையெல்லாம் செய்து காட்டினர். அவர் தான் தப்பித்துக் கொள்வதைப்பற்றியும் மற்றவைகளைப்பற்றியும் அவரே கூறும் விவரங்களை கீழே பிரசுரிக்கிறோம்:—

என்னை தப்பித்துக்கொள்ளும் சாஸ்திரி என்று நானே சொல்லிக் கொள்ளுகிறேன். ஏனெனில் காவலிலிருந்து தப்பித்துக்கொள்ளும் சாஸ்திரத்தை ஆதி முதல் அந்தம் வரையில் நன்றாய் அறிந்திருக்கிறேன். எனினும் என்னால் தப்பிவர முடியாதவைகளும் இருக்கின்றன. எனக்குக் கஷ்டமாகத் தோன்றுபவைகளிலிருந்து எந்த மனிதனும் தப்பிவர முடியாது.

நான் பல சிறைகளிலிருந்து வெளி வந்திருக்கிறேன். மரப் பெட்டியினுள்ளே என்னைப்போட்டு மூடி ஆணிகளை முடுக்கி எஃகுச் சட்டங்களைக் கொண்டு பெட்டியைக் கட்டிவிட்டனர். நான் அதற்குள்ளிருந்து சுலபமாகத் தப்பித்து வெளியே வந்துவிட்டேன். பம்பாய் போலீஸார் வெகு ஜாக்கிரதையோடு என்னுடைய கால்களை விலங்குகளாலும் இரும்புவளையங்களாலும் பிணைத்துவிட்டு ஒரு சாக்கில் போட்டுக்கட்டி சமுத்திரத்தில் போட்டுவிட்டனர். அவர்கள் எவ்வளவு சாமர்த்தியமாகச் செய்திருந்தபோதிலும் இரண்டு நிமிஷத்திற்கெல்லாம் விலங்குகளையும் மற்றவைகளையும் உதறித் தள்ளிவிட்டு மேலே நீந்திக்கொண்டு வந்துவிட்டேன், என்னை ஒரு குறுகலான ஜாடியில் தலை கீழாகப் போட்டனர். அதிலிருந்தும் தப்பித்துக்கொண்டேன். என்னுடைய கை கால்களுக்கு விலங்கிட்டு சரீரத்தை வளைக்கமுடியாதபடி கழுத்து தலை உடல் முதலியவைகளைக் கெட்டியாகப் பிடித்துக்கொள்ளக்கூடிய ஒரு இரும்புக் கூண்டிலிட்டு தண்ணீர் நிறைந்த கண்ணாடித் தொட்டியில் தலை கீழாகப் போட்டனர். அப்படிச் செய்தும் நான் தப்பிவெளியே வந்துவிட்டேன்,

### செய்யமுடியாத போட்டி.

செய்யமுடியாத போட்டிக்கெல்லாம் சிலர் என்னை அழைக்கிறார்கள், நான் தப்பித்துவருவதை நேரில்காணும்பவர் என்னிடத்தில் ஏதோ தெய்வத்தன்மை இருக்கிறதென்றும், கொஞ்ச நேரத்தில் என் சரீரத்தையே காற்றோடு காற்றாய் செய்துவிடக்கூடிய சக்தி என்னிடமிருக்கிறதென்றும் நினைத்துக் கொள்ளுகின்றனர். நான் எவ்வளவு மறுத்தபோதிலும் அவர்கள் நம்புவதில்லை. அவ்வித சக்தி உம்மிடமில்லாவிடில் இவ்வித அபூர்வ காரியங்களை உம்மால் எப்படிச்செய்ய முடியும் என்கின்றனர். ஒரு மனிதன் கண்டும் கேட்டுமிராத நூதன மிருகமொன்றைக் கண்டால் எவ்வளவு ஆச்சரியப்படுவானோ அதைப் போலவே நான் செய்வதைக் கண்டு இது மனிதனால் எப்படிச் செய்யமுடியும் என்று ஆச்சரியப்படுகின்றனர். இது உண்மையே. நான் ஒரு ஸ்ரேஷ்டமான மனிதன் தான். என்னுடைய தந்திரங்களும் ஸ்ரேஷ்டமானவைகள் தான். ஆனால் நான் தந்திரத்தினாலேயே பிழைக்கும் அயோக்கியனல்ல,

சில வாரங்களுக்கு முன்பு ஆயர்லாந்தில் நான் ஒரு பலமான மரப்பெட்டியிலிருந்து தப்பித்து வெளிவந்தேன். அப்பெட்டியைச் செய்தவர்கள் எனக்குத் தெரியாது. அதைச் செய்யக்கூலி மாத்திரம் 50 பவுன் கொடுத்தார்களாம். அப்பெட்டிக்குள் நான் நுழைவதற்குப் போகிறதற்கு முன்பு நான் அதைப் பார்த்ததுகூடக் கிடையாது. நான் அதற்குள்ளே நுழைந்ததும் அதனுடைய மூடியில் பல ஆணிகளை வைத்து முடுக்கி விட்டார்கள். எனினும் 18 நிமிஷத்தில் வெளியே வந்து விட்டேன். சிறிது நேரத்திற்கெல்லாம் ஒருவர் என்னிடம் வந்து, "நீர் மனிதரே அல்ல; தெய்வப் பிறவி" என்றார். என்னிடம் தெய்வத் தன்மைவாய்ந்த சக்திகளிருக்கின்றதென்பதே அவருடைய கருத்து. மற்றொருவர், "80 அடி ஆழமுள்ள கிணற்றில் தாழ்த்திவிட்டால் வெளிவந்து விட முடியுமா? என்று என்னைப் பந்தயத்திற்கு அழைத்தார். அதற்கும் சம்மதித்தேன். நான் கிணற்றிற்குள் போனதும் மேலே சிமெண்டு போட்டு மூடி விடுவதாகக்கூறினர். அப்படி மூடுவாறாகில் என்னால் ஒரு போதும் தப்பித்துவர முடியாதென்று கண்டிப்பாய்க் கூறினேன். அச்சமயத்தில் அவருடைய வார்த்தைகளை ஒப்புக்கொள்வதைத் தவிர வேறொன்றும் செய்வதற்கில்லை. ஒப்புக்கொண்டு, "நீங்கள் மேலே சிமிண்டைப்போட்டு மெழுகி அதற்காகக் கஷ்டப்பட வேண்டியதில்லை. நான் கிணற்றுக்குள் போகிற வரையில் பார்த்துக்கொள்ளுங்கள். உங்களுடைய கண்களுக்குத் தெரியாமல் பறந்து வந்து விடுவதற்கு நான் ஒரு பிசாசல்ல" என்றேன். அவ்விதமே ஜாக்கிரதையாகப் பார்த்து வந்தும் வெளியே வந்து விட்டேன்,

கொஞ்ச காலத்திற்கு முன் நான் இந்தியாவில் பிரயாணஞ்செய்து கொண்டிருக்கும்பொழுது பல சிறை அறைகளிலிருந்து தப்பித்து வெளி வந்திருக்கிறேன். பிஷாவரில் ஒரு அதிகாரி, "எங்கள் சிறையிலிருக்கும் ஒரு பலமான அறையில் உம்மைப்போட்டு பூட்டி விடுகிறோம். வெளியில் இரண்டு குதிரைப்படையை காவல் வைத்திருப்போம். நீர் தப்பித்து வெளிவருவதைக் கண்டால் சுட்டுக்கொன்று விடும்படி அவர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறோம்" என்றார். அவ்விதமே காவல் புரிந்தும் நான் சாமர்த்தியமாக வெளிவந்துவிட்டேன். அவ்வுத்தியோகஸ்தரும் மற்றவர்களைப்போலவே என்னிடத்தில் ஏதோ அபூர்வ சக்தியிருக்கிறதென்று எண்ணிக்கொண்டார். நான் செய்து வந்த பெட்டித்தந்திரத்தில் மற்றொருவர் என்னை பந்தயத்திற்கழைத்தார். நான் இதற்கு முன் பார்த்தேயிராத ஒரு பெட்டிக்குள் என்னைப்போட்டு மேலே ஆணிகொண்டு முடுக்கிவிட்டனர். நான் பெட்டிக்குள் போவதற்கு முன் வேடிக்கை பார்க்க வந்தவர்களில் சிறந்தவர்கள் இருபது பேர் அப்பெட்டியில் எவ்வித தந்திரமுமில்லாது பலமானதாயிருக்கிறதாவென்பதைப் பரிசோதித்துப்பார்த்தனர். 15 நிமிஷங்களுக்கெல்லாம் அந்தப் பெட்டிக்குள்ளிருந்தும் வெளிவந்துவிட்டேன். சில தினங்களுக்கெல்லாம் ஒருவர் என்னிடம் வந்து, "நீர் அப்பெட்டியிலிருந்து தப்பிவந்ததைக் கண்டேன். ஆனால் என்னிடம் ஒரு பெட்டியிருக்கிறது, அதிலிருந்து உம்மால் வெளிவர முடியாது" என்றார். அப்பெட்டியைப்பார்க்க வேண்டுமென்றாவது நான் விரும்பினேனா? இல்லை. அதிலிருந்து தப்பி வெளிவந்து விடுவதாக அவரிடம் கூறிவிட்டேன். பெட்டியைக் கண்டதும் பயப்படத்கூடியதாகவே இருந்தது. அப்பெட்டியின் எல்லாப் பக்கங்களிலும் எஃகுத் தகடுகளைப் போட்டுக் கட்டப்பட்டிருந்தது. அதற்குள் ஒரு மனிதன் புகுவதற்குத்தான் போதிய இடமிருந்தது. உள்ளே புகுந்ததும் மூடியைப் போட்டுவிட்டால் என்னால் கொஞ்சங்கூட அசையமுடியாது. அப்படி முடிந்து அசைந்தாலோ மேலே இருக்கும் கம்பிகள் உடம்பைக் கிழித்து விடும். அதிலும் தப்பித்து வெளிவந்து விட்டேன்.

நான் இதுவரையில் கூறிவந்ததிலிருந்து எனக்கு எவ்விதம் சுலபமான பந்தயங்களும் மிகக் கஷ்டமான பந்தயங்களும் வந்து சேருகின்றன என்பதை நீங்கள் அறிந்துகொள்ளலாம். என்னை ஒரு சிறையிலடைத்து விட்டு நான் வெளிவந்ததைக் காட்டக்கூடிய அடையாளமொன்றுமில்லாமலே வெளிவந்துவிட வேண்டுமென்று சொன்னால் அது எனக்கு சுலபமாயிருப்பதோடு நியாயமாகவும் இருக்கும். அதில்லாமல் சிறையிலிருந்து நீ வெளிவருவதைப் பிறர் கண்டு விட்டால் உன்னைச் சுட்டுக்கொன்று விடும்படி செய்வேன் என்று சொல்லுவது மிகவும் கஷ்டமானதாயிருப்பதோடு கொடுமையானதாகவும் இருக்கிறது. பந்தாட்டத்தில் சிறந்தவரொருவரை என்னோடு பந்தயத்திற்கு வரவேண்டுமென்று அழைக்கலாம் ஆனால் நான் விளையாடுவதைப் போல் விளையாடாவிட்டால் துப்பாக்கி கொண்டு சுட்டுவிடுவேன் என்று பந்தயத்திற்கு அழைப்பது எவ்விதம் நியாயமானதாகும்?

### தெய்வ சக்தியில்லை.

நான் செய்வதைப் பார்ப்பவர்களெல்லாம் என்னிடம் தெய்வசக்தியிருப்பதாகவே எண்ணுகின்றனர். அதை மறுத்து நான் எவ்வளவு சொல்லிய போதிலும் நம்புகிறவர்கள் கிடையாது. என்னுடைய சாமர்த்தியங்களையெல்லாம் கண்டு ஆச்சரியமுள்ள ஒருவர் என்னால் ஜெயிக்க முடியாத காரியமொன்றைக் கண்டுபிடித்திருப்பதாகக் கூறினர். அதாவது, என்னை ஒரு இரும்புப் பெட்டிக்குள் போட்டு பூட்டி எரிந்துகொண்டிருக்கும் பெருந்தீயில் அப்பெட்டியைப் போட்டு விடுவதாம், அதற்குள்ளிருந்து நான் தப்பித்து வெளிவந்து விடவேண்டுமாம், அது என்னால் செய்ய முடியாத காரியந்தானென்பதைக் கண்டிப்பாகக் கூறிவிட்டேன்,

நான் சீனாவுக்கும் சென்றிருந்தேன். அங்கு ஷாங்கேயில் கார்ல்டன் நடனசாலையில் என்னுடைய காட்சியை நடத்தினேன். அந்த நடனசாலையிலிருந்த ஒரு இரும்புப்பெட்டிக்குள்ளிருந்து தப்பி வெளிவந்து காட்டுவதும் அன்று நான் காட்டிய காட்சிகளிலொன்று. நான் அப்பெட்டிக்குள் போவதற்கு முன்பே ஜனங்கள் அப்பெட்டியை நன்றாய்ச் சோதித்துப்பார்த்தனர், அவர்கள் திருப்தியடைந்த பிறகுதான் என்னை உள்ளே வைத்துப்பூட்டினார்கள். நான் அதிலிருந்து தப்பி வெளிவந்தபோது என்னிடத்தில் ஒருவர் ஓடிவந்து, "ஸ்ரீ. மர்ரே, நீர் இப்பெட்டியிலிருந்து எப்படியோ தப்பி வந்துவிட்டீர். என்னுடைய வீட்டில் ஒரு இரும்புப்பெட்டியிருக்கிறது. 500 டாலர் பந்தயம் கட்டுகிறேன். அதிலிருந்து வெளியே வந்துவிடும் பார்ப்போம்" என்றார். அவருடைய பந்தயத்தை ஏற்றுக்கொண்டு மறுநாள் அவருடைய வீட்டிற்குச் சென்றேன். அங்கே சுவற்றில் பதியவைத்துக் கட்டியிருந்த இரும்புப்பெட்டியை எனக்குக் காட்டினார். என்னை அதற்குள் போட்டு பூட்டிவிட்டார். எனினும் அரைமணி நேரத்திற்குள் வெளியே வந்துவிட்டேன். பிறகு சந்தோஷத்தோடு 500 டாலரை எனக்குக் கொடுத்துவிட்டார்.

### துப்பாக்கிக்குத் தப்பமுடியாது.

கொஞ்ச நேரத்திற்கெல்லாம் என்னை உத்தியோகத்தில் அமர்த்திக்கொள்வதைப்பற்றிப் பேசினார். அவர் ஷாங்கேயிலுள்ள ருஷிய சங்கத்தில் ஒரு அங்கத்தினராம். அவர் எனக்குவைத்த பரீட்சையில் நான் தேறிவிட்டபடியால் அவர்கள் சங்கம் 30,000 டாலர் கொடுக்கக்கூட தயாராயிருக்கிறதாம். ஆனால் நான் ருஷியாவுக்குப்போய் சோவியத் அரசாங்கத்தினரிடமிருக்கும் முக்கிய தஸ்தாவேஜுகளைத் திருடி தம்மிடம் கொடுத்துவிட வேண்டுமென்றும் கூறினார். அதனால் எனக்கு அதிகத்தொகை கிடைப்பதாயிருந்தபோதிலும் என்னால் முடியாதென்று மறுத்துவிட்டேன். உடனே அவர் ஆச்சரியத்தோடு, "ஏன்! நீர் எப்படி இப்பெட்டிக்குள்ளிருந்து வெளியே வந்தீரோ அதேமாதிரி வெளியேயிருந்தும் இன்னொரு பெட்டிக்குள் நுழைந்துவிடக்கூடும். சோவியத் அதிகாரிகள் உம்மைப் பிடித்துக்கொண்டு விட்டாலும் நீர் சிறையிலிருந்து தப்பித்துக்கொண்டு விடலாம். எவ்வித பந்தோபஸ்தைச்செய்தாலும் உம்மைப் பேசாமல் வைத்திருக்க ஒருவராலும் முடியாது." என்றார். நீங்கள் சொல்வது உண்மையே. ஆனால் அவர்கள் என்னை சிறையிலிடுவதற்குப் பதிலாக என்னை ஒரு சுவற்றிற்கருகே வைத்து ஒரு துப்பாக்கிகொண்டு சுடச்சொல்லி விடுவார்களானால் அதிலிருந்து தப்பிவெளிவர என்னால் முடியாது" என்று பதில் கூறிவிட்டேன்,


## போட்டோ காமிரா,



இது புதிதாக லண்டன் மாநகரில் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் போட்டோ கிராப் படங்கள் பிடிக்க சிறு பிள்ளைகளும் எளிதில் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு தயார் செய்யப்பட்டது. கற்றுக்கொண்டு மாதம் ரூ 50 முதல் 500 வரை சம்பாதிக்கலாம், புகைப்படம் பிடிக்கும் ரகசியங்கள் காமிராவுடன் சேர்த்து அனுப்பப்படும். விலை ரூ 3—8—0.

(ரூபாய் மூன்று அணு எட்டு)

கிடைக்குமிடம்:—HART & Co
Coimbatore, (S. India)

## தமிழ் புக் கீப்பிங்

விலை ரூபாய் 1,

கணக்கு வைக்கும் முறையை புகட்டு போதிப்பது; ஒற்றைப் பதிவு, இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களும் அடங்கியிருக்கின்றன. அனேக வியாபார இரகசியங்களையு முடையது வியாபாரிகள். மாணுக்கர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம்.

தே. ஆறுமுகஞ் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி,

## புத்திர சந்தான எண்ணெய்.



ஸ்திரீகளின் கர்ப்பஸ்தானத்தில் புழுக்கள் உண்டாகி அவ்வப்போது வித்தைப் புசித்து வருவதினுலும் மற்றும் பல காரணத்தினுலும் கர்ப்பஸ்தானத்தில் சதை வளர்ந்து சொரி பற்றி இரத்தங்கட்டியிருந்தாலும் நூலச் சுழியில் வாய்வு பிடித்தம் தங்கினுலும் கருத்தரிக்காது. இந்த எண்ணெயைக் காலை மாலை இருவேளையும் 1—அல்லது 2-காசு அளவு உள்ளங்கையில் விட்டு நக்கிச் சாப்பிடவேண்டியது. இப்படி 15—நாள் சாப்பிட்டால் கர்ப்பஸ்தானத்திலிருக்கும் சகலவித குற்றங்களையும் நீங்கி சுத்தப்படுத்தி மறுமாதத்திலேயே கர்ப்பந்தரிக்கும். சிலருக்கு கருத்தரித்து 2-3-4 மாதங்கள் வரையில் சூலாயிருந்து திடீரென்று உடைந்து போவதுமுண்டு. இப்பேர்க்கொத்த கெர்ப்ப தோஷமெல்லாம் இந்த எண்ணெயால் நிவர்த்தியாகி தீர்க்காயுளான கருத்தரிக்கும். புட்டி 1-க்கு ரூ 2.

கேட்லாக் இனும்.

விலாசம்:—
என், வி. கோபால் மெடிகல் ஹால்,
37. திருப்பள்ளி தெரு, சௌகார்பேட்டை, மதராஸ்.


Tamil Heritage Foundation International Digital Library EBook collection